அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர் : 7 இதழ் 5 விலை அ. 4	மன்மத ௵ ஆவணி ௴ ஆகஸ்டு - செப்—1955	வருட சந்தா ரு. 2-4-0



பரமனுக்கு மாலை சூட்டிப் பஞ்சாக்கரம் ஓதி
அருள் பெற்ற முருக நாயனார்.

(பெரிய புராணச் சித்திர விளக்கம் 17. பக்கம் 195)

பொருளடக்கம்

			பக்கம்
1.	நான்கு பாவனைகள்	(திருப்புகழ்மணி)	... 193
2.	முருக நாயனார்	(கி. வா. ஜ.)	... 195
3.	மங்களா சாஸனம்	(அன்பன்)	... 198
4.	ஆத்ம போதம் (திரு நா. பிச்சுமணி; திரு கி. சுப்பிரமணியன்)		... 202
5.	வேண்டும்	(K. S. சுந்தரமூர்த்தி)	... 206
6.	குறத்தி கூறிய குறி (சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)		... 209
7.	சாதுக்களின் வரிசையில்	(ஆ. கி. ரங்கராஜன்)	... 213
8.	தேவாரக் காலை	(இளவழகனார்)	... 218
9.	ஸ்ரீவைஷ்ணவர் செல்வம்	(V. S. வேங்கடராமன்)	... 223
10.	கன்னிப் பெண்கள்	(ரசபதி)	... 229
11.	The Glory of Prema	(*Thiruppugal Mani*)	... 239

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு இலங்கை உள்பட, ரூ. 2—4—0. நான்கு வருடச் சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா 4 ஷில்லிங்குகள். நான்கு வருடச் சந்தா 15 ஷில் லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே மன்மத ஆண்டிற்கு உரிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின் நடுவில் சந்தாச் செலுத்தினால், முன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தாதாரர்களாகச் சேர்க்கவோ மறுக்கவோ நேரும். ஆகையால், ஆண்டு பிறப்பதன் முன் சந்தா செலுத்துவதே நலம்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 7	மன்மத ௵ ஆவணி ௴ ஆகஸ்ட்—செப்டம்பர் - 1955	இதழ் 5

நான்கு பாவனைகள்

(திருப்புகழ்மணி)

பக்தி வழியில் முயற்சித்து முக்தியடையக் கருதும் பெருமக்கள், வாழ்க்கையை நான்கு பாவனைகளோடு நடத்துவார்களாம். மானிடம் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது ஆகும். முதலாவதாக யாவரிடத்திலும், தெரிந்தவர் தெரியாதவர் எவர்களா யிருந்தாலும் ஸ்நேகபாவம் வேண்டுமாம். நட்பெனும் மனோபாவம் தோன்றிவிட்டால், உலகில் சகலரிடத்திலும் தோழன் என்ற உணர்ச்சி வந்துவிடும். "பாதமலர் மீது போத மலர் தூவிப் பாடுமவர் தோழப் பெருமாளே" என்று அருணகிரி பாடியுள்ளார். அப்பர் ஸ்வாமிகளும் "வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான்" என்று காளத்தியானைப் பாடியுள்ளார். ஈசன் எல்லா உயிர்கள் உள்ளும் உயிருக்குயிராய் உறைவ

மூவிரு அத்து வாக்கள் முகங்களாய் விளங்கும் மூர்த்தி
மூவிரு பகையை நீக்கும் முதல்வனே முருக வேளே!

தால், தொண்டர்களுக்கு உலகமெலாம் தோழர்கள் என்ற உணர்ச்சி வருவது ஸகஜம்தானே. வேண்டாத ஜீவன் ஒன்றுமே கிடையாது.

இரண்டாவதாக, உலகில் பலவிதத்தாலும் கஷ்டப்பட்டும் துன்பப்பட்டும் வருந்துகிற ஜீவராசிகளில், எதைப் பார்த்தாலும், மனதில் கருணை தோன்ற வேண்டும். மன ஈரம் இல்லாவிடில் ஆண்டவன் கருணை நமக்குக் கிட்டாது. ஆண்டவனை அடைய விரும்புபவன் ஜீவராசிகளிடத்தில் அன்பாய் நடந்து கொள்ள வேண்டுமாம். மனத்தின் இரக்கம்தான், நெகிழ்ந்த பக்தியை ஊட்டும் சாதனம்.

மூன்றுவதாக அசூயை, பொறுமையற்ற குணம் வேண்டுமாம். க்ருஷ்ணன் அர்ச்சுனனுக்கு கீதை உபதேசம் செய்கின்ற காலத்தில், "நீ அசூயை இல்லாது இருக்கிறபடியால் உனக்கு இந்த உபதேசத்தை சொல்கின்றேன்" என்று கூறினாராம். அசூயை பொறுமை இல்லாதது மாத்திரமல்ல. பிறர் மேன்மையையும் பெருமையையும் அடைந்தால்; அவரை நல்வழியில் நின்று கொண்டாட வேண்டும். அவர்கள் சந்தோஷமும் பெருமையும் தமதாகக் கருதி ஆனந்தமடைய வேண்டும். வேற்றுமையற்ற மனப்பான்மையில்தான் இந்த உணர்ச்சி ஏற்படும். நம் நாட்டில் பெரியோர்களுக்கு உருவப்படங்கள் செய்துவைப்பதும், கல்லாலும் லோகங்களாலும் உரு செய்து வைப்பதும், இந்த மேன்மையான பாவத்தின் விமர்சனம்தான்.

தீவினை யெல்லாம் தீர்த்துன் சேவடி தன்னைப் போற்றும்
வாழ்வினை என்றே ஈவாய் வள்ளலே பழனித் தேவே!

நாலாவதாக, தீங்கு இழைக்கின்ருரையும், அதர் மத்தை நாடினவரையும், பார்க்காமலும் எதிர்க்காமலும் உபேக்ஷை செய்யும் பாவனை வேண்டுமாம். அவர்களை கவனியாது இல்லது போலப் பாவித்து, நல்வழியில் ப்ரவேசித்து மேற் செல்லும் பாவனையாகும். இந்த நான்கு பாவனைகளும் மனிதன் ஒழுக்க முறையில் வைத்துக் கொள்ளல் வேண்டும். இவை மனத்தூய் மைக்கும் மன அமைதிக்கும் தெய்வ சிந்தனைக்கும் இன்றியமையாத பண்புகளாம்.

முருக நாயனர்

(கி. வா. ஜ.)

சோழ நாட்டில் திருப்புகலூர் என்பது ஒரு தலம். அங்கே இறைவனுக்குப் பல சந்நிதிகள் இருக்கின்றன. அக்கினீசுவரர் என்பது பிரதானமான சந்நிதியில் எழுந் தருளியிருக்கும் பெருமான் திருநாமம். அந்தச் சந்நிதியை யன்றி இறைவன் மூன்று கால மாகியும் நிற்கும் சந்நிதிகள் மூன்று இருக்கின்றன. அவற்றில் உள்ள பெருமான் களுக்கு முறையே பூதேசுவரர், வர்த்தமானேசுவரர், பவிஷ் யேசுவரர் என்ற திருநாமங்கள் வழங்கும்.

அக்கினீசுவரராகிய சோணப்பிரானும் வர்த்தமானீசு வரரும் தேவாரப் பதிகங்களால் போற்றப் பெற்றவர்கள். வர்த்தமானீச்சரத்தைத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் ஒரு பதிகத்தால் துதித்திருக்கிருர்.

வர்த்தமானீச்சரத்தில் சந்நிதியில் ஓர் அடியாரின் அழகிய திருவுருவம் நிற்கிறது. அவர் முருக நாயனர்.

ஆறெழுத் துக்கள் தம்மை ஆனன மாகக் கொண்டாய்
ஆறுயிர்ச் சாலங்கட்குள் ஆன்மனுய்த் திகழும் சோதி!

திருப்புகலூரில் வாழ்ந்து இறைவனுடைய திருத்தொண்டில் ஈடுபட்டுப் பேறு பெற்றவர்.

திருப்புகலூரில் அந்தணர் மரபில் உதித்தவர் முருகனார். ஆதி சைவ அந்தணர் என்றும் சொல்வதுண்டு. எப்போதும் இறைவனுடைய திருவடியை நினைத்து உருகும் சிந்தையை யுடையவர் முருக நாயனார். சிவபிரானுக்குரிய தொண்டுகள் பல. அவற்றில் அப் பெருமானுக்குரிய பூமாலைகளைச் சாத்தும் பணியை அவர் மேற்கொண்டார். விடிவதற்கு முன்னே துயிலெழுந்து புனித நீரில் மூழ்கிப் பின் திரு நந்தவனம் சென்று, அலரும் பருவத்தில் உள்ள மலர்களைப் பறித்துப் பூங்குடலைகளில் தொகுத்துக் கொணர்வார். அவற்றைத் தூய்மையான ஓரிடத்தில் கொணர்ந்து இறைவனுடைய அலங்காரத்துக்கு ஏற்கும் வகையில் பலவித மாலைகளைத் தொடுப்பார். தலையில் அணியும் இண்டை, மார்பில் அணியும் தார், பெரிய மாலையாகிய தாமம் என்று மாலைகளில் பல வகை உண்டு. எந்த எந்தக் காலத்தில் எவை எவை வேண்டுமோ அவற்றை அழகாகத் தொடுப்பார்.

அவ்வாறு மாலைகளைத் தொடுத்து, பிறகு அவற்றைத் தாங்கி ஆலயம் சென்று இறைவனுக்குச் சாத்தி, அழகு பார்த்துக் கண்ணீர் மல்க நின்று உருகுவார். விடுதிப் பூக்களால் அருச்சனை செய்து இன்புறுவார்.

இந்தத் திருப்பணி செய்வதோடு எப்போதும் எம்பெருமானுடைய பஞ்சாட்சரத்தை இடைவிடாமல் ஓதிக் கொண்டே இருப்பார்.

முருக நாயனார்க்கு வர்த்தமானீச்சரத்தில் மிகுதியான ஈடுபாடு. அந்தச் சந்நிதியில் அவர் இந்த மலர்த் தொண்டை முட்டின்றிச் செய்து வந்தார்.

ஆறுமா சமயம் போற்றும் ஆதியாய் மூலம் ஆனோய்!
ஆறுதல் உயிர்கட் கீயும் ஐயனே அருள்செய்வாயே

அவர் திருப்புகலூரில் ஒரு மடம் கட்டிக்கொண்டு வாழ்ந்தார். இப்போது அவ்வூரில் கிடைக்கும் கல் வெட்டு ஒன்றில் 'நம்பி முருகன் திருமடம்' என்ற குறிப்புக் காணப் படுகிறது. முருக நாயனர் மடத்தில் திருஞான சம்பந்தர், அப்பர் சுவாமிகள், சிறுத்தொண்டர், திருநீல நக்கர் ஆகிய வர்கள் வந்து தங்கினர்கள்.

திருஞான சம்பந்தப் பெருமான் முருக நாயனருடைய திருத் தொண்டு கண்டு அவர்பால் மிக்க அன்பு பூண்டார். வர்த்தமானீச்சரரைத் தரிசனம் செய்து கொண்டு திருப்பதிகம் பாடினர். அப் பதிகத்தில்

தொண்டர் தண்கயம் மூழ்கித்
துணையலும் சாந்தமும் புகையும்
கொண்டு கொண்டடி பரவிக்
குறிப்பறி முருகன் செய் கோலம்
கண்டு கண்டுகண் குளிரக்
களிபரந் தொளிமல்கு கள்ளார்
வண்டு பாண் செய்யும் புகலூர்
வர்த்தமா னீச்சரத் தாரே.

ஈசன் ஏறமர் கடவுள்
இன்னமு தெந்தையெம் பெருமான்
பூசு மாசில்வெண் ணீற்றர்
பொலிவுடைப் பூம்புக லூரில்
மூசு வண்டறை கொன்றை
முருகன்முப் போதும்செய் முடிமேல்
வாச மாமலர் உடையார்
வர்த்தமா னீச்சரத் தாரே.

என்று இரண்டிடங்களில் முருக நாயனர் தொண்டைச் சிறப்பித்துப் பாடினர்.

ஆறுசாத் திரமுமுன்றன் அழகிய வதன மாகும்
ஆறுமா படைவீ டாகும் அமலனே அருட்கொழுந்தே!

திருஞான சம்பந்தர் திரு மணம் நல்லூர்ப் பெரு மணத்தில் நிகழ்வதை அறிந்து முருக நாயனுர் அங்கே சென்ருர். இறைவன் திருவருளால் அப்போது எழுந்த சோதியில் திருஞான சம்பந்தரும் பிறரும் புகுந்தபோது, இவரும் புகுந்து இறைவன் திருவடி நிழலில் என்றும் மாருத இன்ப நிலையை அடைந்தார்.

முப்போதும் திருமேனி தீண்டும் உரிமையும் வேத ஆகம அறிவும் நிரம்பிய முருக நாயனுர், திருமலர் கொய்து மாலை தொடுத்து அணியும் திருத் தொண்டைச் செய்தார். மனத்தாலும் வாக்காலும் உடம்பாலும் செய்யும் சிவத் தொண்டுகள் பக்குவம் இல்லாதவர்களிடம் வெவ்வேறு நிலையாக இருக்கும். இறைவன் அருளில் ஒன்றிய சிவஞானி களுக்கு எந்தத் தொண்டும் சமானமான நிலையுடையதே. பஞ்சாட்சரத்தை எப்போதும் ஜபிப்பதும், திருமாலைத் தொண்டு செய்வதும் முருக நாயனுருக்கு ஒன்ருகவே இருந்தன. அப்பர் சுவாமிகளுக்கு உழவாரத் தொண்டும் தேவாரத் தொண்டும் ஒன்ருகவே இருந்தன அல்லவா?

திருப்பல்லாண்டு 5

மங்களா சாஸனம்

[அன்பன்]

(173-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

அன்னம் வயிருர அகப்படவில்லை. ஆடைக்குமா பஞ்சம்? சீ! என்ன வாழ்வு இது? பசியாற, நாள்தோறும் பாடுபட வேண்டியுளது என்று ஏங்குகின்ருர் பலர்.

முயற்சியின் பயனுக, சுவல்ப ஊதியம் கிடைக் கிறது. உயர்ந்த உணவு, அழகிய ஆடை, மதிப்பிற்கு உரிய ஆபரணங்கள், மாடமாளிகை, வாகனுதி வசதிகளை

விரும்புகிறது மனம். கிடைக்கும் வருவாய், அவைகட்கு இடம் தரவில்லை. நினைத்தவை நிறைவேற வேண்டும். அதற்கே மென்மேலும் முயன்று முயன்று, நெஞ்சம் புண்ணாகி நெட்டுயிர்ப்புவிட நேர்கிறது. வாழ்க்கைப் போராட்டத்தில், ஒரு நாளும் மனத்திற்கு ஓய்விருப்பதே இல்லை. இது என்ன தொல்லை?

இந்த அவதி தீர, யாது வழி யென்று இடையறாது மனனம் செய்கிறது மனம். தகுதியுடையவர் தயவிருந்தால், தலைவலி இது தவிர்ந்துவிடும்; யார் அந்தத் தலைவர்?

இது ஒரு அண்டம். இதைப்போல், அளவிலாத அண்டங்கள் இருக்கின்றன. அவைகட்கெல்லாம் நாராயணனே அதிபதி. அவன் திருவருளுக்கு ஆளானால், ஒரு அண்டத்தின் அதிபதியாகி ஆனந்தமாக இருக்கலாம். ஆம். அதுதான் வழி. அந்தப் பிரபுவை, அப்பெயர் கொண்டே இடையறாது அழைத்தால், ஒரு நாள் அவர் வந்து உதவுவது நிச்சயம். அங்ஙனம் முயன்றார்க்கு அருளிய வரலாறுகளும் பல வுள என்று எண்ணிய இந்த எண்ணத்தால்,

அண்டாதிபதயே நமோ நம: அண்டாதிபதயே நமோ நம: என்று இப்படியே உருவேற்றுபவர் ஒரு கோடி.

இனி மற்றொரு கூட்டம் இந்த உலகில் இருக்கிறது. பரிதாபமான அவர்களையும் பாருங்கள்!

விரலுக்குத் தக்க வீக்கம் என்பர். அதுபோல், ஊழ்க்குத் தக்க ஊதியம் வளர்ந்தது. செல்வம் திரண்டது. இருந்து என்ன பயன்? இந்த உலகில் வஞ்ச நெஞ்சர் பலர் வாழ்கின்றனர். அவர்களுள், வகையான திருடர்களாய் மாளிகையுள் வந்தவர்கள் உண்டு. கொள்ளை வழிப்பறி செய்யும் கொடியோரும் உண்டு. நம்பிக்கைத் துரோகத்தால் நாசஞ்செய்வாரும் பலர் உளர். இந்த அசுர பரம்பரை, இராட்சசக் கூட்டம் நடமாடும் நாட்டில், உயர்ந்த செல்வந்தர்க்கு நிம்மதியும் உண்டோ? பிரபுக்கள் பலர், இவர்களால் பிட்சாதிபதிகளாயினர்.

ஒருமுகம் உலகை ஆக்கும் ஒருமுகம் உலகைக் காக்கும்
ஒருமுகம் சங்கரிக்கும் ஒருமுகம் பேறளிக்கும்

வேதனை தீராதா? விமோசனமே இல்லையா? இவை களையெண்ணி, அலமந்து நாள்தோறும் அழுகிறது இதயம்.

மின்வெட்டுப் போல் ஒரு செய்தி, உள்கும் உளத்தில் திடீரென்று உதிக்கிறது. அசுர ராட்சசரை அழித்து, அந் நாளில் அமரர்க்கு அருளினன் அத்தன். ஆம். அவனை இடையறுது ஏத்துவம்; பேரருளைப் பெறுவம். அதன் மூலம், கையகன்ற செல்வத்தை மறுபடியும் காணமுடியும். இதுதான் வழியென்று உறுதியாக நம்புகிறது உள்ளம். உடனே, எம்பெருமானை இதயத்து எண்ணி,

அஸுர சத்ரவே நமோநம: அஸுர சத்ரவே நமோநம: என்று ஓயாமல் உருவேற்றுகின்றவர் ஒருகோடி. இங்ஙனம் நித்திய வறுமையாளரும், செல்வம் இழந்தவரும் என இரு வகையர் உலகில் உளர். பகவானை இவர்கள்தான் அதிகம் பஜிக்கின்றூர். அட பாவமே! என்ன இது என்று அதிர் கிறது பெரியாழ்வார் இதயம்.

சீசீ! இது என்ன கேவலநிலை. அம்மானுடைய அருள் நலம் எண்ணி ஆயிர நாமம் ஓத இருக்க, சுயநலத் திற் சுழித்து, அண்டாதிபதி; அஸுர சத்ரு எனும் இரு நாமமே உருவேற்றல் இயல்பாமோ? நமக்கு என்ன தேவை? அதை ஆதிமூல வேதநாதன் அறியானோ? அறிந்து அருளானோ? தூய இச்செய்தி ஏன் உங்கட்குத் தோன்ற வில்லை!

அண்டம் பல. பயனுன அவைகளைப் படைத்தான். பாதுகாக்கிறுன். அவைகட்கு எல்லாம் அவனே அதிபதி. ஆ! என்ன கம்பீரமான தெய்வம்! கற்பகத்தைச் சாந்தவர் கள் காஞ்சிரங்காய் கேட்பதோ? ஒரு சிறிதும் நன்றுயில்லை உங்கள் நடை. கேளுங்கள்!

உணர்விற்குத் தக்கபடி உணர்வு அமையும். அதை எண்ணி உயர்ந்த அமுதம் உண்டனர்; அதற்கு ஏற்ற அமைதி கொண்டனர்; அவர் பெயர் சுரர்.

உணவாலும், ஒழுக்கத்தாலும், அவ்வானவர்க்கு மாறு னவர் அசுரர். முழுமை இரக்கம் உள்ளவர் முனிவர்கள்.

ஒருமுகம் இதயத் தோங்கும் ஒருமுகம் வினையைத் தீர்க்கும்
திருமுரு கன்றன் சீர்த்தி செப்புதல் சுலப மன்றே

அவர்கட்கு மாறுபட்ட குரூர குணத்தவர் இராட்சசர். விஷக் கிருமிகள் விரைந்து பெருகுவதுபோல், அளவின்றி வளரும் இந்த அநியாயக் கூட்டம்.

பலரையும் வாழ வைக்கும் பயிர்களைப் போன்றவர் பக்த பரிஜனங்கள்; இது தெளிவு மிகுந்த ஞானிகளின் தீர்ப்பு. அசுர ராட்சசர், கவினும் பயிரிடை வந்த களைகள் போன்றவர். விதைத்து, அருள்நீர் பாய்ச்சி, பயிர்களை வளர்ப்பவன் பரமன். இடையில் களைகள் எழுந்தனவாயின், களைகளைக் களைந்து, பக்தஜன பயிர்களைப் பாதுகாப்பது பரமன் கடன். பயனுள இவைகளை மறப்பதுதான் பாவம்.

'அண்டக் குலத்துக்(கு) அதிபதியாகி, அசுரர் இராக்கதரை இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த இருடிகேசன்'

அவன். இது உங்கள் நினைவில் இருக்க வேண்டும். அப்பெருமானை ஆராதிக்கும் நிமல அடியார் கூட்டத்தைச் சேர்ந்த நீங்கள், பயனைக் கருதும் பழைய வாசனையை அடியோடு விட்டுவிட வேண்டும். எம்பெருமானைத் தவிர வேறு எதையும் பொருளாகக் கொள்ளாத எங்களுடன், உங்கட்கு உறவிருப்பது நலம். இனி நாங்கள் என்ன செய்யவேண்டும், என்கிறீர்களா!

அண்டக் குலத்துக்(கு) அதிபதி யாகி, அசுரர் இராக்கதரை
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த இருடி கேசன் தனக்கு,
தொண்டக் குலத்தில் உள்ளீர்! வந்தடி தொழு(து) ஆயிரநாமம்
[சொல்லிப்
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்(டு)
[என்மினே.

(பொ – ரை.) (தனிப்பெரும்) அண்டங்கட்கு எல்லாம் தலைவனாய், அசுர ராட்சசரான அளவின்றிப் பெருகிய (அக்கிரமக்) கூட்டத்தை அடியொடு அழித்த எம்பெருமானுக்கு, அடியர் கூட்டத்தில் அமைந்தவர்களே! நீங்கள் உங்கள் மாபெரும் சுயநலத்தை மறந்து விட்டு, எம்மொடு கலந்து, வரதராஜனின் திருவடிகளை வணங்கி, அவனுடைய

துயரங்கொள் ஏழை முன்பு துரிதமா வந்து நீயே
தயவுடன் காத்தருள்வாய் தற்பரா தனியர் வாழ்வே!

ஆயிர நாமங்களையும் சொல்லி, சிறந்த மங்களா சாஸனத்தை என்றும் செய்து கொண்டிருப்பீர்களாக, (எ–று).

பரந்தாமனுடைய பாதமலரைத் தொழுமின்கள்! அவனுடைய ஆயிர நாமங்களையும் வாயாரச் சொல்லி அவனை ஆராதியுங்கள்! மாதவனுக்கு மங்களா சாஸனம் என்ற பெயரால், பயனை பல்லாண்டைப் பாடுங்கள்! இன்பமயமாகி வாழ்வதற்கு இஃது ஒன்றே வழி. தெரிகிறதா! என்று பேரருள் உடையவராய்ப் பாடுகின்றார் பெரியாழ்வார்.

இண்டைக்குலம் - அடர்ந்த கூட்டம். இண்டர் கூட்டம் பாடமெனில், (அசுர ராட்சச) சண்டாளர் கூட்டம் என்று பொருள் கொள்க. பண்டைக்குலம் - பயனை விரும்பிய பாழும் சூழல். ருஷிகேசன் - இந்திரிய நிக்ரகன்.

அருளொடு ஆழ்வார் அறிவிக்கும் இதற்கு அயலாக, வாழ வழி இது என்று எவர் சொன்னாலும் கேளாமையே நலன். இன்றைய உலகில் வித்தக இந்நிலை பெரிதும் வேண்டப் பெறும்.

(தொடரும்)

வாழ்க உலகம்!

ஆத்ம போதம்

(திரு. நா. பிச்சுமணி—திரு. கி. சுப்பிரமணியன்)

(162-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு நம் நாட்டம் வீண் ஆடம்பரங்களிலும், போலி வேஷங்களிலும் நிற்க, நமக்கு நன்மை பயக்கும் பொருள் எளிய வாழ்க்கையிலும், நேர்மையிலும் இருக்கக் கண்டோம். நம் நாட்டம் பொய்; வஞ்சனை, பொறாமை, இவற்றில் உழல, நம் நலன் ஸத்யம், பிறர் நலம் பேணல், அன்பு, இவற்றில் மண்டிக் கிடக்கிறது. நம் நாட்டம் நான், நான், நான் எனும் ஆணவமாயும், தற்பெருமையாயும் பரிணமிக்க, நம் நலன் பணிவிலும், அடக்கத்திலும்

இருக்கிறது என்பதை மறந்தோம். நம் நாட்டம் தன்னல உருக்கொள்ள நமக்கு இகத்திற்கும் பரத்திற்கும் ஸ்ரேயஸ் கரமானதும், அளவிலா இன்பம் பயக்கக் கூடியதுமான தியாகத்தின் பெருமையை உணரச் சக்தியற்றவர்களா னோம். நம் மனதில் சகுனி, துர்யோதனன், சிசுபாலன், ராவணாதியர்கள் குடிகொள்ள, கிருஷ்ணனின் தத்வோப தேசங்களும், ஸ்ரீ ராகவனின் மெய்ம்மை வழியும் நமக்கு செவிடன் செவிகளில் சங்கொலியாயும், பிறவிக் குருட னுக்குக் கலங்கரை விளக்காயும் ஆயின. நம் நாட்டமும் நலனும் இவ்வாறு ஒன்றுக்கொன்று விரோதமான திசை களில் சென்றுகொண் டிருக்கின்றன. எப்பொழுது அவை இரண்டும் ஒரே திசையில் செல்லத் துவங்குகின்றனவோ, அல்லது எப்பொழுது நாம் நம் உயிருக்கும், உடலுக்கும் நலம் பயக்கும் காரியங்களில் ஈடுபடுகிறோமோ, எப்பொழுது அன்பு, ஸத்யம், தியாகம், விருப்பு, வெறுப்பு இன்மை, சம நோக்கு, அவாவின்மை, சாந்தம், திருப்தி, விரிந்தநோக்கு, உயர்ந்த நோக்கங்களால் வியாபிக்கப்பட்டு, நம் வாழ்க்கை யின் ஒவ்வொரு அம்சமும், அதாவது, நாம் கருத் தால் எண்ணும் எண்ணங்களும், கரங்களாதி அவய வங்களால் புரியும் காரியங்களும், வாக்கால் பேசும் பேச்சுக் களும், புனிதத் தன்மையும், தூய்மைபெற்றுக் களங்கமற் றுப் பிரகாசிக்கின்றதோ, எப்பொழுது உலகில் காணும் ஒவ்வொரு சிறு அணுமுதல், அண்டம் வரையில் உள்ள எல்லாப் பொருள்களிலும், எங்கும் பரந்து ஜோதி ஸ்வரூப மாய், காற்றின் சுகமாயும், தண்ணீரின் தட்பமாயும், மண் ணின் பல்வேறு அற்புதப் பொருள்களாயும், ஆகாசத்தின் ஒலியாயும் வியாபித்து நிற்கும் ஈச்வர சைதன்யத்தை அறிந்து அநுபவித்து அன்பு செய்கின்றோமோ, அப் பொழுதே நாம் அமரத் தன்மையும் அழியா இன்பமும் பெற்றவர்களாவோம். நமக்கு எது வேண்டும், எது நன்

அபய மென்று சாதுவை ஆதரிப்ப துன்கடன்
உபயமாங் கதியையியும் உமையவள் குமாரனே

மையும், ஸ்ரேயஸ்ஸூம் பயக்கும், எவை ப்ரியமானவையா யிருப்பவைபோல் தோன்றினும் நமக்குக் கெடுதல் பயப் பவை; எவை செய்யத் தக்கவை; எவை செய்யத் தகாதவை என்பவற்றை அறிவால் பகுத்தறிந்து, மனதால் நல்லதையே எண்ணி, அறமே புரிந்து, இனிமையே மொழிய உறுதிசெய்து, ஸத்யமான மார்க்கத்தில் செல்லும் மனிதனே மனிதனுவான்.

உண்மை, ஒழுங்கு, கட்டுப்பாடு, தைரியம், அன்பு முத லியவை கேவலம் நன்மை பயப்பவை என்ற காரணத்தால் மட்டும் விரும்பத் தக்கவை அல்ல. அவையே மனிதனுக்கு இயல்பாக அமைய வேண்டிய குணங்களாகும். மனிதனை மனிதன் என்று தனியாகப் பெயரிட்டு அழைக்கத் தகுதி யுள்ளவனுக ஆக்க இச்சிறப்புக் குணங்கள் அவனிடம் அமைய வேண்டியது அவசியம். இல்லையெனில் அவன் மற்ற மிருகங்களுடன் ஒப்பிடத் தக்கவனுகவோ, அல்லது மிருகங்களிலும் கேவலமாகவோ ஆகின்றதன்றி மனித னென அழைக்கப்படத் தகான். மனிதத் தன்மையின் இலக்கணம் வகுக்குங்கால்,

“ ஒருமையுடன் உனது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமையுடன் நினது புகழ் பேசவேண்டும்
பொய்ம்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண் ஆசையை மறக்க வேண்டும்
நினைமறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின் கருணை நிதிவேண்டும்
நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும் ”

(இராமலிங்க அடிகளார்)

கபட்முற்ற தீயரைக் கழுவிலிட்ட சண்முகா
விபவமீயும் வித்தனே வெற்றிமா மயூரனே

எனக்கூறி, மனமும் புலன்களும் சாதாரணமாகச் செல்லும் போக்கும், அவற்றைத் தடுத்து, ஆண்டவன்பால் திருப்பி, அம்மனம் புலன்களையே உயர்ந்த நோக்கங்களின் ஸித்திக்கு உபயோகப்படுத்தக் கோரி, இறைவனை வேண்டும் இப்பாட்டு நெஞ்சை உருக்குகின்றதல்லவா ?

நாம் செய்யும் சிறிது முதல் பெரிதிறுக உள்ள எல்லாச் செய்கைகளும், ஆண்டவன் பலத்தாலே, ஆண்டவன் தூண்டுதலாலேயே செய்கிறோம். நாம் சிந்திக்கும் ஒவ்வொரு சிந்தனைக்கும் கருவியாக உள்ளவன் அவன். அவன் நினைத்தால் உயிரை உடலிலிருந்து இக்கணமே பிரிக்கலாம். மறு கணமே பல்லாயிரக் கணக்கான புது உயிர்களைத் தோற்றுவிக்கலாம். இவ்வளவு நிச்சயமான ஆண்டவனுடைய அற்புத சக்தியை உணர்ந்தும், உணராத மரக் கட்டைகளாய், நாமே இவ்வுலகின் தனி ராஜர்போல் ஆணவத்தால் கண் மூடியாய்த் திரிகின்றோம்.

"செய்யும் செய்கையும் சிந்திக்கும் சிந்தையும்,
ஐய நின்னதென் று எண்ணும் அறிவின்றி
வெய்ய காம வெகுளி மயக்கமாம்
பொய்யிலே சுழன்றேன் என்ன புன்மையே"

என்றபடி காமச் சேற்றில் சிக்கி, கோபத்தால் தளைப்பட்டு, அறியாமையில் அமிழ்ந்து கிடக்கும் நிலைமை அந்தோ! மிக்க பரிதாபம். இவ்வறிவு நிலையை அன்றே அடைந்து, என்னைத் திருத்திக்கொள்ளாமற் போனேனே! துன்மார்க்கனுய், கயவனுய், அறிவிலியாய் உழன்றேனே என அறிவால் உந்தப்பட்டு, ஆத்மபோதம் அடையும் ஜீவன், தன் முன் தீவினை குறித்து உருகி அழுதது.

(தொடரும்)

கழலிணையே காப்பெனக் கருதிநிற்கும் ஏழையின்
பழவினையை நீக்குதல் பாரமோ பரேசனே

வேண்டும்

(K. S. சுந்தரமூர்த்தி)

தில்லையில் இறைவன் ஆடுகின்றான். ஐம்பொறியின் ஆணையில் இயங்கும் நாம் ஆடுகின்றோம். ஆண்டவன் ஆடுகின்கிறான் நாமெல்லாம் ஆடவேண்டுமென்று. எப்படி யெப்படி எல்லாம் ஆடுகிறான். இனிமை செய்கின்ற பொற்பாதத்தை எடுத்து நின்று, புருவத்தைக் குனித்து, குமிழ்ச் சிரிப்பைக் கொவ்வைச் செவ்வாயிலே தேக்கி பனித்த சடையுடைய அப் பரமன், தமது பவள மேனியே தூயவெண்ணீற்றால் ஆடி நிற்க ஆடுவதைப் பாருங்கள்!

அன்று தக்கனது வேள்வியிலே சந்திரனைச் சாடினான். அதனால் அவன் மாசு கழுவப் பெற்றான். அன்றியும் அச் சந்திரன் இறைவன் திருமுடியிலே இருக்கவும் கண்டோம். வாக்கின் மன்னர் கூறுகின்றனர்.

"மறுமதியை மாசு கழுவும் அடி" யென்று.

ஆம். எந்த இறைவனை மறந்து குற்றம் செய்ய நின்றானே, அந்த இறைவனாலேயே ஆண்டருளப்பெற்றான்.

உள்ளத்தாலும், உரையாலும், செயலாலும் இறையன்பு புரிந்து வந்தார் மார்க்கண்டேயர். அவரது அன்பு மாசு இல்லாதது. மாண்பு மிக்க அவரது தூய வழிபாட்டின் தொன்மையை அறியாத மறிந்த சிந்தையை உடையவன் மறலி. அவர்மேல் தமது பாசக் கயிற்றை விசிறினான். அவன் கண்டது என்ன? தமது உருமாறி நின்று மேலே பறந்து சென்ற நான்முகனுக்கும், கீழே இடந்து சென்ற மாலுக்கும் ஒளித்து நின்ற இறைவனது அறிவதற்கரிய தான சேவடியாகும்.

எந்த இறைவன் கருணையால் தமது செயல் இனிது நிகழுகிறது என்பதை மறந்தானே; எந்த ஆண்டவனின்

விழிகளா பிரண்டினில் ஒன்று என்றன் மீதினில்
விழுதலாற் குறைவெதுவும் விளையுமோ சொல் வேலனே

அன்புக்கு உரியவராகிய மார்க்கண்டேயரின் உயிரைப் பற்றுவதற்குச் சென்றானே; அந்தக் காலன் அறிந்தான், மறை இறைஞ்சும் இறைவனது மலரடிகளை.

"மேலு மறிந்திலன் நான்முகன் மேற்சென்று கீழிடந்து
மாலு மறிந்திலன்; மாலுற்ற தேவழி பாடுசெய்யும்
பாலன் மிசைச்சென்று பாசம் விசிறி மறிந்த சிந்தைக்
கால னறிந்தா னறிதற் கரியான் கழலடியே"

இப்படி இனிமை தருகின்ற செம்மொழியால் கூறுகிறார் அப்பரடிகள்.

இறைவன் பக்தி வலையிலே படுபவன். இயற்கை வழியிலே சென்று காண்போர்க்கு இசைவோன். யான் என்றும், எனது என்றும் சொல்லுகின்ற இரண்டும் அற்ற இடத்தையே தமது இரண்டு திருவடிகளாக உடையவன். நினைப்பு மறப்பு என்றவைகளால் அறியக் கூடாத நித்தியன். உடம்பையும், உயிரையும், உணர்ச்சிகளையும், உலகையும், உயர்ந்த வானத்தையும், அந்த வானிலே வாடுகின்ற வானவர்களையும் மறந்து, முடிவில் நான் என்பதையும் மறந்து, தன்னை மறவாது காண விழைகின்ற அன்பர்க்குத் தேனாகி இனிமை செய்வோன்.

இவ் வழி நின்ற இறைவனைக் காண வேண்டுமென்று நல்வழி நில்லாத இருவர் விரும்பினர். மெய்ஞ் ஞானம் என்கின்ற வான்முகக் கண் கொண்டு காண வேண்டியவனை, ஊன்முகக் கண் கொண்டு காண விழைந்தனர். கற்பனை யெல்லாங் கடந்து நிற்போனைத் தங்களின் கற்பனையில் கட்டுப்படுத்தி வைக்கவே கருதினர். அன்பு கொண்டு தேட வேண்டியவனை ஆராய்ச்சி கொண்டு தேடினர். எண்ணுகின்றோரின் எண்ணங்களை எல்லாம் உடனிருந்து அறியக் கூடியவனை, கள்ள உணர்வோடு தம் நிலை மாறிச் சென்றும் பார்த்தனர். இறைவன் இவர்களுக்குத் தோற்றினானோ? இல்லை.

தந்தைதாயு மெற்குநீ தாங்குகின்ற பந்துநீ
சிந்தைநாடும் பொருளுநீ சிவோஹ போத குருவுநீ

சித்தத்து எழுந்த செழுங் கமலத்தைப் போன்ற இறைவனது சேவடிகளைத் தம் மனத்திலே வைத்து வாழ்கின்ற அன்பர்களைத் தில்லையிலே காணப் பெற்றார் அப்பரடிகள். அப்பால் சிற்றம் பலத்தே சஞ்சிதவினை தீர்க்கும் குஞ்சித பாதனையுங் கண்டார். ஐயன் நட்டம் ஆட எடுத்திட்ட அந்த பாதத்தைக் காணலுற்ற போது அவருக்கு உள்ளம் உருகிற்று. எல்லையில்லாத அடிமை பூண்டு நின்றார். தொல்லை வல்வினையின் தொந்தத்தையும் விண்டார். அன்னமும், சொன்னமும் வழங்கும் அம்பல வாணரை அன்போடு பார்த்தார். இனித்தமுடைய எடுத்த பொற் பாதமே நெஞ்சில் இடம் கொண்டது. அப்பொழுது அவருக்கு எதுவும் நினைவுக்கு வரவில்லை. இறைவனை விளித்துக் கூவினர். கூவினரா? இல்லை; இல்லை. வேண்டினர். என்ன வேண்டினர்? பிறவி வேண்டினர். என்ன பிறவியை வேண்டுகிறார்? மனித்தப் பிறவியே வேண்டுமென்றார். அவர் சொல்வதைக் கேட்போம்.

> "இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுங் காணப் பெற்றால்
> மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே"

இந்த அருமையான செந்தமிழ் நம் செவியிலே ஒலிக்கின்ற போது எத்தனை இனிமை தருகின்றது.

இப்பொழுது மேலே கூறிவந்த அனைத்தையும் ஒருங்கே சிந்திக்குமாறு நம்மை அழைக்கின்றார் வாகீசர். காதல் கொண்டு உள்ளக் கசிவோடு, கண்ணீர் பெருகுமாறு ஓதுவோம்: வாருங்கள்.

> சாட வெடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை;
> வீட வெடுத்தது காலனை; நாரணன் நான்முகனும்
> தேட வெடுத்தது; தில்லையுட் சிற்றம் பலத்து நட்டம்
> ஆட எடுத்திட்ட பாதமன் றோநம்மை யாட் கொண்டதே.

குறத்தி கூறிய குறி

(சே. த. இராமலிங்கம் பிள்ளை, B A., B.T.)

மாடி வீடு. சாளரங்கள் செம்மையாகத் திறந்திருக்கின்றன. ஒரு அறையில் ஆணும் பெண்ணுமாய்ப் பலர் வந்து வந்து போகின்றனர். கூட்டம் கூட்டமாய் நின்று என்னவோ முணு முணுக்கின்றனர். "இப்படியே இருந்தால் நிலைமை மோசமாகிவிடும். பிறகு இந்த அம்மை தன் மகளை இழக்கவே நேரும்" என்றார் சிலர். "மருந்துண்டால் குணமாகும்" என்பாரும், "மனக்கவலைக்கு மருந்துண்டா?" என்பாரும், "எத்தனை நாளாய் இப்படியிருக்கிறாள்?" எனவினவுவார்க்குச், "சென்ற கார்த்திகைப் பெரு விழாவிற்குச் சென்றது முதல் இன்னும் தேறவில்லை" என்பாருமாய்ப் பலர் காணப்பட்டனர்.

அறையில் ஒரு வெள்ளிய படுக்கையில் ஒரு மங்கை புரண்டு கொண்டிருந்தாள். கோதி முடிக்காது அலைந்து கொண்டிருந்த கூந்தல், பொலிவற்ற முகம், சோகம் நிறைந்த கண்கள், எதையோ எண்ணிப் புண்ணான நெஞ்சம், இளைத்த உடல், அழுக்கடைந்த ஆடை இக்கோலத்துடன் உணவும் உறக்கமும் நீத்து நின்ற அம் மங்கை நல்லாளின் நிலை, கண்டோர்க்குக் கவலையே தந்தது. அப்போது கவலைகொண்ட முகத்துடன் அம்மங்கையின் அன்னை ஒருபக்கமும், அவளை என்றும் பிரியா இளநங்கையான தோழி ஒருபக்கமும் நின்றிருந்தனர்.

குறி சொல்லும் குறத்தி :—

அப்போது வீதியிலே ஒரு குரல் கேட்கிறது.

"குறிசொல்வேன் அம்மே நான்குறி சொல்வேன் அம்மே
கொண்டமனக் கருத்தமையக் குறிசொல்வேன் அம்மே
மறிமானும் மழுவமைத்த தயவாளர் தம்மை
மங்கைமணப் பாயென்றே மலைமகளுக் குரைத்தேன்
செறிவான புனமானின் தேவியவள் தனக்கும்
திகழ்வேலன் மணப்பனெனத் திறம்படவுஞ் சொன்னேன்
அறிவான உருவாளர் அருணை லேசர்
அருள்வாக்கா மென்குறியும் அவலமல காணே

ஒன்றிரண்டோ துன்பமும் ஒய்வதில்லை யோகுகா
என்று நானுன் திருவருள் எய்திவாழ்த லீசனே?

என்று ஒரு குறி சொல்லும் குறத்தி கூவிக்கொண்டு செல்கிருள். அப்போது தலைவியின் தாய் வீதியில் ஓடிவந்து பார்க்கிருள்.

அள்ளிச் செருகிய கூந்தல்; பரந்த நெற்றி. வளைந்த புருவம். சிவப்பு, வெள்ளை, கருப்புப் பொட்டுகள் அவளது நெற்றியின் அழகை மிகுத்து புதுப் பொலிவு தருகின்றன. இடது கையில் ஒரு கூடை. அதில் இரண்டொரு பழங்கந்தைகள். வலப்பக்கத்தில் மார்பிலிருந்து சுற்றிய புடவையில் தொங்கி அசைந்தாடும் பச்சிளம் பாலகன். கையில் சகல தேவதைகளையும் வசியம் செய்து வைத்துள்ள மாத்திரைக்கோல் (மந்திரத்தடி). இடுப்பில் தொங்கும் பையில் வெற்றிலை பாக்கு முதலியன. மந்திர அஞ்சனம் அமைந்த சிறு டப்பிகள். இவற்றையுடைய கோலத்துடன் நின்ற குறத்தியைத் தாயழைக்க, தோழி வழிகாட்ட அவள் உள்ளே வந்தாள்.

குறிகூறல் :—

குறத்தியை அழைத்து வந்து பாயும் படுக்கையுமா யிருக்கும் தலைவியைக் காட்டி, 'அம்மா' இவளது நோய் இதுவென்று எங்கட்குத் தெரியவில்லை. மருந்தால் தீரவில்லை. வேறு மந்திரத்தால் ஆகவில்லை. இந்நோய் எப்படி வந்தது? எப்படித் தீரும். விவரமாய்ச் சொல்லவேண்டும் என்ருள் தாய். உடனே குறத்தி "முன்னுழி முச்சிரங்கை நெல்லளந்து கொண்டு வா. என் குழந்தையின் உச்சிக்கு எண்ணெய் வை. ஒரு முழந் துண்டு கொடு" என்றெல்லாம் கூறினள். தோழியும் அவள் விரும்பியவற்றை எல்லாம் கொண்டு வந்து கொடுத்தாள். குறத்தி சுளகில் வைத்த நெல்லை எல்லாம் கூறுகூருகப் பிரித்து எதோ எண்ணினள். பின் கையிலுள்ள சிறு மந்திரக்கோலைச் சுழற்றினள். அவள் கண்கள் மூடின. ஒரு விடிையில் அவள் தலையும் சுற்றலாயிற்று. தலைவியின் முகத்தைப் பார்த்த நிலையில் கண்கள் திறந்தன. அவள் உடலெல்லாம் குலுங்கியது. "தெரிந்தது. தெரிந்தது. சுளகில் வைத்த நெல் ஒற்றைபட்டது. ஆதலால் தலைவியின் நலிவு உடல் நோயல்ல. உள்ளத்தில் உதித்த தள்ளாக் காதலே. உள்ளங் கவர்ந்த கள்வரையும் காட்டுகின்றேன். அவருடைய கையில்

என்றுமுன்றன் பதத்தினை ஏத்தியுய்த்த லேகதி
நன்று நன்றுன் கருணையும் நாதனே மகேசனே!

மான்கன்றும் மழுப்படையும் உண்டு. அவரது கழுத்து மட்டும் சற்றுக் கருப்பாயிருக்கும். கையில் கபாலம் உண்டு. சொல்வ தெல்லாம் உண்மையா இல்லையா? படுத்துள்ள அம்மணியைக் கேளுங்கள்" என்று கூறிச் சற்று நிறுத்தினாள். உடனே படுத் திருந்த தலைவி எழுந்து உட்கார்ந்தாள். அவளது உள்ளத்தில் மலர்ச்சியும், கண்களில் ஒளியும் வந்தன. மெல்ல மெல்ல நகர்ந்து குறத்தி யருகில் வந்தாள். ஈனக் குரலில் 'ஆம். நீ சொன்ன யாவும் உண்மைதான். அவரை எங்கே போய்ப் பார்க்க முடியும்?" என்றாள். உடனே குறத்தி, 'அம்மே! கவலைப்படாதே. அவரைப் பார்க்கவேண்டுமானால் **திருவண்ணமலை**க்குப் போகவேண்டும். அவர் பெயர் **தேவராயர்** என்பது. அவ்வூருக்கே அவர்தான் தெய்வம். வேறு எவரும் அவரை ஒப்பாரில்லை. அவர்மட்டும் இவளைக் கண்டு விட்டால் நலிந்த இவள்தன் உயிருக்கு உற்ற இடரை உடனே ஒழிப் பர்"என்றாள். உடனே தாயும்தோழியும் அவளைப் பார்த்து"அம்மா! உனக்குக் கோடி புண்ணியம் உண்டு. இம் மகளது மிகக் கேவல மான உடல் நிலையுடன் இவளைத் திருவண்ணமலைக்குக் கொண்டு போக முடியுமா? அத் தலைவரே இங்கு வர வழியில்லையா?" என்று கெஞ்சிக் கேட்டனர். உடனே குறத்தி "ஆ! ஈதென்ன ஒரு பெருங் காரியமா? நமது மந்திரத் திருநீற்றை ஒரு சிறிது, தொட்டு நெற்றியில் பொட்டாக இட்டுக்கொண்டாலும் வானகத் துத் தேவர்களும் வந்து முன்னே நின்றிடுவர். இதோ அதற்குரிய திருநீறு பெற்றுக்கொள்" என்று ஒரு சிறு சிமிழைத் திறந்து ஓரிலையில் கொஞ்சம் திருநீற்றை எடுத்து வைத்தாள். "இதனை மிக பத்திரமாகப் போற்றவேண்டும். பூசையறையில் வைத்து ஆராதனை செய்து காலையிலும் மாலையிலும் இவளது நெற்றியில் மூன்று ரேகையாக அணிந்துவந்தால், தலைவரே இவள் செல்லு மிடம் எல்லாம் பின்னேடி வருவார்" என்று சொன்னாள். உடனே தலைவி எழுந்து அவள் காலில் விழுந்து பணிந்து அந்தத் திருநீற் றைப் பெற்றுக்கொண்டாள். குறத்திக்குப் புனைதுகிலும் பொற் காசுகளும் தந்து தலைவியின் தாய் வழிகூட்டி அனுப்பினாள்.

நித்த நித்தம் நேமமாய் நெஞ்சினில் நினைந்துநின்
பத்தி செய்து வாழ்ந்திடப் பரிந்தருள்செய் பரமனே

இரண்டொரு நாள்கள் கடந்தன. குறத்தி கூறியபடியே அண்ணமலை அண்ணலார் காட்சி தந்து நின்ரூர். தலைவியும் மழை கண்டமயில் போலவும், விழி பெற்ற குருடன் போலவும், இழந்த புதையல் பெற்ற வறிஞன் போலவும் மட்டற்ற மகிழ்ச்சியுற்றுத் தலைவனைக் கலந்து அந்தமிலின்ப அருங்கடல் மூழ்கினுள். **குறத்தி கூறிய குறியும்** பலித்தமைக்கு அனைவரும் மகிழ்ந்தனர்.

''ஒன்றுமூன்று நாமுரைப்ப நன்றுகேளும் அரிவைமீர்!
உதயமான சுளகுநெல்லு ஒன்றைபட்டது ஆதலால்
கன்றுமானும் மழுவுமாக ஒருவர்வந்து தோன்றினர்
கண்டமட்டிலே கறுப்பர் கைக்கபாலர் அவரைநாம்
சென்றுநாடில் அருணைமீது காணலாகும் நாமமும்
தேவராயர் அவரையன்றித் தெய்வம் வேறுகண்டிலோம்
நின்றுவாடு மிவள்தனுவி யிடர் தவிர்ப்ப ராதலால்
நீறுகொண்டு மூன்றிரேகை நெற்றிமீதி லணியுமே''

மேற்சொல்லிய நங்கையை ஆட்கொண்ட நம்பன் இருப்பிடம் எண்ணுதவரையும் ஈர்த்தருளும் **அண்ணுமலை**யாகும். ஆணவத்தால் ஆராய்வார்க்கு அண்ணுமலை (எட்டாத மலை) யாகவும். அடியார் குழாங்கட்கு "அணி அண்ணுமலை" யாயும் (மிக்க அணித்தாய்—அருகில் எட்டத்தக்கதாயும்) உள்ளது. இந்தத் தலத்தில்தான், நமது கருணை மிக்க திருப்புகழ் நாவலர் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அவதரித்தருளினர். அவர்களது திருநாள் நினைவுப் பெருவிழாவினை எத்திக்கு முற்ற வெற்றித்திருப்புகழ் முழக்கும் அடியார் திருக்கூட்டத்தினர் திருவண்ணுமலையிலேயே கொண்டாடக் கருதினர். அதனைச் செம்மையாய் முன்னின்று திருவருட்டுணை கொண்டு நடத்தச் சென்னை **அடியார் ஞாயிறு கூட்டம் இறைபணி மன்றத்தினர்** அன்புடன் ஏற்றுகொண்டமை பாராட்டற்குரியது. அதற்காக 15—8—55 என்ற **தேச விடுதலை** நாளை நமது '**பாச விடுதலை**'க்குப் பயன்படுத்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

அன்பர்கள் அனைவரும் போந்து திருவருளும் குருவருளும் பெற்றுய்வார்களாக.

''வாசிப்பதுன் அடியார்புகழ் வந்திப்பதுன் அடியார்பதம்
தேசிப்பதுன் அடியார் பதம் நினைகிற்பதுன் அடியார்பதம்
பூசிப்பதுன் அடியார் பதம் புனைகிற்பதுன் அடியார்பதம்
ஆசிப்பதுன் அடியார் பதம் அருணசலா அருணசலா

அண்ணுமலையான் அருட்புகழ் வெல்க !
திருப்புகழ் ஆசான் திருவடிவாழ்க !

உன்னையன்றி எளியனுக் குதவியேது ஓதுவாய்
என்னையிந்த வேளையில் இரங்கி வந்தே ஆளுவாய்

சாதுக்களின் வரிசையில்

(ஆ. கி. ரங்கராஜன்)

ஆண்டவனின் ஆடலைக் கண்டு ஆனந்திக்க வல்லவர் சாதுக்களேயாம். சாதுக்கள் யாரெனில், சதா தின்றுவிட்டுத் திண்ணை வேதாந்தம் பேசும் சோம்பேறிகள் சாதுக்கள் ஆகமாட்டார்கள். காஷாயம் தரித்துக் கபடமாய்த் திரிபவர்கள் சாதுக்கள் அல்லர். தாங்களே ஆண்டவனின் அடியார்கள் என்று கூறி மக்களின் உடமைகளால் ஜீவிக்கும் ஆஷாடபூதிகள் சாதுக்கள் ஆக முடியாது. அப்படி என்றால் சாதுக்கள் யார் ?

சுயநலத்தை வெறுத்துப் பிறர் நலம் கருதி செயல் புரியும் தியாகிகளே சாதுக்களெனப்படுவர். எவ்வுயிர்கட்கும் இன்னல் விளைக்காது இயற்கையின் வழி செல்பவர்களே சாதுக்களெனப் புகழப்படுவர். தன்னை மற்றவர் புகழவேண்டும் என்ற சிந்தனையின்றி தத்தம் கடமையைச் செய்பவர்களே சாதுக்களென மற்றவர்களால் போற்றப்படுவர். தன்னை எதிர்த்து நிற்கும் கொடிய இடுக்கண்களையும் பொருட் படுத்தாது சத்ய நெறியில் பணியாற்றுபவர்களே சாதுக்களென உலகினரால் வணங்கப்படுவர்.

வள்ளுவர் பெருமான் இத்தகைய சாதுக்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், ஏந்திய கொள்கையார் என்றும், குணமென்னும் குன்றேறி நின்ருர் என்றும் கூறுகிருர். ஏனெனில், இதைவிட உயர்ந்த பதங்கள் எதுவும் இல்லை என்பதால்தான். சாதுக்களுக்கு மரணம் என்பது என்றென்றுமே கிடையாது. ஏனெனில் இப் பூத உடல் அழியும் தன்மையது என்பதையும், அவ்வுடலில் வசிக்கும் தாங்கள் எக்காலத்தும் நிரந்தரமாய் விளங்கும் ஆற்றலுடையவர்களென்பதையும் நன்குணர்ந்தவர்களாம். ஆகவே அமரர்களும் அவர்களைக் கண்டு அஞ்சலி செய்வர். சாதுக்கள் ஞானமாகிய அமுதுண்டு மோன நிஷ்டையில் ஆழ்ந்திருப்பர். அவர்கட்கு இவ்வூன உடலைப்பற்றி சிறிதும் அக்கரை

தண்டபாணி மூர்த்தியே தண்ணருட் சொரூபனே
அண்டரண்டக் காவலா அநாதைநாத தற்பர

இல்லை. ஆகவேதான் தாயுமானவரும் "ஜெகமீதிருந்தாலும் மரணமுண்டென்பதை சதாநிஷ்டர் நினைவதில்லை" என்று கூறுகிறார்.

சாதுக்களை நாம் வணங்கி வழிபடுவதால் இறைவனின் இன்னருளுக்கு எளிதில் பாத்திரங்களாகிறோம். கருணையும் பொறுமையும் சாந்தமும் திகழும் சாதுக்களாலேயே உலகமும் செழிப்பை எய்துகிறது.

நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை............ஔவை.

ஆனால் இத்தகைய சாதுக்களுக்கு எத்தகையோரும் இடையூறு அளிக்க இயலாது. அளிக்கவும் கூடாது. ஏனெனில் சாதுக்களுக்கு ஆண்டவனும் அரசனும் ஆண்டியும் ஒன்றே. அவர்களுக்குத் துன்பத்தைத் தருவது தெய்வ கோபத்தைத் தூண்டிவிடுவதாகும். சாதுக்களின் சினத்தைத் தடுக்க சர்வேஸ்வரனாலும் முடியாது.

சாதுக்களின் வரிசையில் பதிவிரதா ஸ்த்ரீ ரத்னங்கள் முதன்மை பெற்றவர்கள். அவர்கள் தங்களின் நாயகனுடைய சுகம் ஒன்றையே கருதி அதற்கெனத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்தவர்கள். அதனால் அவர்கள் தெய்வீக சக்தியை அடைகின்றனர். குறிப்பாக ஆடவர் ஒருவரும் மங்கையர் ஒருவருமாகிய இரு சாதுக்கள் ஏக காலத்தில் புரிந்த ஆற்றல் ஒன்றைக் கவனிப்போம்.

நளமகாராஜனின் புத்திரியும் மௌத்கல்யனின் பத்னியுமான நளாயினி மாறுவேடத்திலிருக்கும் தன் கணவனை ஓர் கூடையில் வைத்துத் தலையில் சுமந்து தன் இருப்பிடம் வந்துகொண்டிருக்கையில், கழுவில் தத்தளிக்கும் ஆணிமாண்டவ்ய முனிவரின்மீது நடு நிசியில் தவறி மோதிவிட, அதைத் தாளாத முனிவன் சூர்யோதயத்தில் நளாயினியை மாங்கல்ய மிழக்கக் கடவதெனச் சபித்தார். பதியின் நலத்தையே பரம இன்பமாய்க் கருதிய நளாயினி சூரியன் உதிக்காம லிருக்கக் கடவதென மறுசாபம் அளித்தாள்.

மண்டுதுன்பத் தால்மிக மயக்கமுற்ற தமியனைக்
கண்டுவாளா இருத்தலும் கண்யமோ குகேசனே

ஆதித்தன் தோன்றுததால் அமரர்கள் அவனியோர் அனைவரின் தொழிலும் தடைப்பட்டது. அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கிய இருவரும் பின் தங்கள் சாபத்தை மீட்டுக் கொண்டனர். தன்னை அறியாத சிறுவயதில் செய்த குற்றங்களுக்காகத் தண்டனை விதித்த தர்மதேவனை ஆணிமாண்டவ்யர் பூவுலகில் (விதுரனாய்ப்) பிறக்கும்படி சபித்தார்.—மஹா பாரதம்.

தனது அழகைக் கண்டு ஆசை கொண்டு அணையவந்த அக்னிபகவானையே தகித்த அரிவை அருந்ததி. காலனை வழிமறித்துக் கணவனின் உயிர் பரித்த காரிகை சாவித்திரி. தனது கணவனைக் கள்வன் என சந்தேகித்துத் திர விசாரியாது தண்டித்த பாண்டியனின் குற்றத்திற்காக மதுரை நகரையே மாபெரும் தீயில் ஆழ்த்தினாள் கண்ணகி. ஆனால் அத்தகைய ஆத்திரத்திலும் அறிவின் சுடர் பிரகாசிப்பதை எப்படித்தான் வர்ணிப்பது! மாதர்கள், பெரியோர்கள், சிசுக்கள், பசுக்கள், நல்லவர்கள் ஆகியவர்களை விட்டுத் தீயோர் பக்கம் சூழ்க என அக்னிக் கடவுளுக்கு ஆணையிட்டாள் கண்ணகி. இதைப்போன்று பதிவிரதா ஸ்ரீகள் சாதுக்களின் வரிசையில் அதிக ஆக்கம் பெறுகின்றனர்.

உலகிற்கு வேதங்களின் சாரத்தைப் பிழிந்து திருக்குறளாக அளித்த வள்ளுவனும் ஓர் சாது எனக் கூறத் தேவையில்லை.

தேவர்கள் அனைவரும் சூழ்ந்திருக்க, இறைவன் இன்ப நடம்புரிந்தான். செவியில் இருந்த ரத்ன குண்டலம் கீழே விழுந்தது. இறைவன் தனது பாதத்தினலேயே எடுத்து செவியில் அதை அணிந்துகொண்டான். அதைக் கண்டிருந்த நாரத முனிவரும் நாரணமூர்த்தியும் ஏனைய அமரர்களை ஆலோசனைக் குட்படுத்தினர். எம்பிரான் தேவர்களை விளித்து, "நீவிர் அனைவரும் பூவுலகில் வசிக்கும் என் அன்பராகிய வள்ளுவரிடம் சென்று ஐயப்பாடு தீருமின்!" என்று பகர்ந்தனன். வள்ளுவரை விண்ணவர் நாடி நடந்ததை நவின்றனர்.

சஞ்சலங்க ளால்மிகச் சலிப்படைந்த தமியனை
அஞ்சலென்று வந்துநீ ஆண்டருள்வ தென்றுசொல்

வள்ளுவர் அதிசயித்தார். ஆனந்தித்தார். அடி பணிந்து கூறினர். "அமரர்களே! பல ஆண்டுகள் தவம் கிடப்பினும் உங்களில் ஒருவரையேனும் காணமுடியாது. அவ்வாறிருக்க, உங்கள் அனைவரையும் ஏக காலத்தில் ஒருங்கே தரிசித்த என் பாக்யமே பாக்யம்! எம்பெருமான் கீழே விழுந்த குண்டலத்தை நடனமாடி செவியில் இட்டுக் கொண்ட அற்புதக் காக்ஷியை எவ்வாறு இந்த ஏழையேன் அறிந்து வர்ணனை செய்ய இயலும்?" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்ட விண்ணோர் ஆச்சரியமுற்று வள்ளுவரை வணங்கி வாழ்த்திச் சென்றனர்.

வள்ளுவரின் திருக்குறளை ஏற்க மறுத்த சங்கப் புலவர்களைத் தண்ணீரில் ஆழ்த்திய சங்கப் பலகை, திருக்குறளுக்கு மட்டும் இடமளித்துக் குறுக்கலாகின்றது. தடாகத்தில் மூழ்கித் தத்தளித்த புலவர்கள் வள்ளுவரிடம் மன்னிப்புக் கேட்டனர், அவர்கள் அனைவரும் திருக்குறளுக்குச் சாற்றுக் கவி பாடினர். அவற்றில் சில பின் வருவன :

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி
குறுகத் தறித்த குறள்.

—ஔவையார்.

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததன்பின்—போயொருத்தர்
வாய்கேட்க நூலுளவோ? மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

—நத்தத்தனார்.

ஓதற்கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கும்—நீதற்றோர்
உள்ளுதோ றுள்ளுதோ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு!

—மாங்குடி மருதனார்.

தஞ்சமென்ற ஏழைமேல் தயவுமில்லை யோசிவா
குஞ்சரீச சண்முகா குணோத்தமா பராத்மனே

எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால்
இல்லாத எப்பொருளு மில்லையால்—சொல்லாற்
பரந்தபா வானு லென்பயன்? வள்ளுவனுர்
சுரந்தபா வையத் துணை.

—மதுரைத் தமிழ் நாயனுர்.

இவற்றைத் தவிர இன்னும் நக்கீரர், மன்னன் உக்கிரப் பெருவழுதி முதலான பல புலவர்களும் பாடியுள்ள கவிகள் சொற்சுவை, பொருட்சுவையுடன் இன்பத்தைத் தரு கின்றன.

இத்தகைய சாதுக்களுக்கு – உத்தமர்களுக்கு - மஹாத் மாக்களுக்கு அசாதாரண சக்தியும் ஆற்றலும் ஏற்படுவதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில் அது இயற்கையன்னை அளிக்கும் சலுகை! நீதிதேவனின் அரசியல் சட்டத்தில் கண்டிருக்கும் ஷரத்துக்களில் ஒன்று!

நாம் சாதுக்கள் ஆகக்கூடாதா? ஆக முடியாதா? என்று கேட்கலாம். அது நியாயமே. ஆயினும் நாம் சாதுக்கள் ஆகிவிட வேண்டும் என்ற சுயநலச் சிந்தையுடன் எப் பணியையும் ஆற்றுவதால் அது பயனற்றுப் போகும். ஆனல் சாதுக்களையே அணுகி அவர்களுடன் கலந்து அவர் களின் சொற்படி நடப்பின் நாமும் சாதுக்கள் ஆகிவிட ஏது உண்டாகும்.

சாதுக்கள் ஆகவேண்டுமெனில் காட்டுக்கு ஓடிவிட வேண்டுமென்று அர்த்தமில்லை. ஆசைப்பேயை அடக்க வேண்டும். அறிவைப் பண்படுத்த வேண்டும். காமக் குரோதாதி அறுபகைவர்களைக் கொன்று, ஆணவ, காமிய, மாய்கையாகிய மும் மலங்களை அகற்றி, பரிசுத்தமான உள் ளத்துடன் பணியாற்ற வேண்டும். உண்மையையே உயர் வாக மதித்து அதன் வழி செல்லும் பெரியோர்களிடம் நட்புக் கொள்ளவேண்டும். இவ்வாறு நடந்துகொண்டால் சாதுக்களின் வரிசையில் திகழவேண்டுமென்ற விருப்பத் திற்கு இதுவே போதுமானதாகும்.

இன்னு மென்னை வாட்டுதல் ஏற்குமோ தயாபரா
பன்னலஞ்சேர் பழனிவாழ் பாலசுப்ர மண்யனே

ஜனகன், அம்பரீஷன், சிபி முதலியோர் அரசர்களாய் இருந்து, அவனியை ஆண்டிருப்பினும் பற்றற்றவர்களாய் திகழ்ந்தார்களன்றோ. விசுவாமித்ர முனிவரின் ஆத்திரத்தையும் கர்வத்தையும் எதிர்த்து அடக்கியது அரிச்சந்திர மன்னன் கையாண்ட அன்பும் அஹிம்சையும் சத்தியமும் பற்றற்ற தன்மையும்தான் என்பதிலும் ஐயப்பாடு உண்டோ?

தேவாரக் காளை

(இளவழகனுர்)

அப்பர் சுந்தரர் சம்பந்தர் என்னும் மூவரும், 'மூவர் முதலிகள் என்று முதன்மை கருதிப் பாராட்டப் பெறுவர்! ஆண்டவனுக்குப் பாக்களால் மாலைகள் சூட்டிய பெருமை இவர்களுக்கு உரியது. அப்பாமாலைகள் இறைவர்க்கும் அடியார்க்கும் மதிப்பும் அன்பும் தந்ததனல், அவை 'தே ஆரம்' என்று சிறப்புப் பெயர் பெற்றன. 'மூவர் தமிழ்' என்று பெருமையுடன் வழங்கியும், 'மூவர் தமிழ் மொழிக்கு மொழி தித்திக்கும்' என்று நன்கு சுவைத்தும் பிற்கால நல்லோர் இன்புற்றனர்!

இத்தகைய அரும்பெறல் தேவாரங்கள் வெளிவிடுவதற்கு மூவர் முதலிகளுக்குச் சிறந்த அருள் உள்ளம் இருந்தது; தமிழுக்கும் தமிழகத்துக்கும் தவம் இருந்தது; நாட்டில் நாளும் இனிமைப்பட்டு வந்த செம்மைப் பண்பும் இருந்தது! தமிழகம் பெற்ற பெரிய பேறுகளில் 'மூவர் தேவாரம்' தலையணி போன்றது!

மூவர் பெருமக்களுள் ஒருவர் கிழவர், ஒருவர் இளைஞர், ஒருவர் சிறுவர்! அமைப்பு இப்படியா அமைய வேண்டும்! அப்பர் கிழவர், அதாவது கிழப் பருவத்தில் அருள் பெற்று விளங்கியவர்! சுந்தரர் இளைஞர், பருவத்தில் அருள்

ஆறெழுத்து மந்திரம் ஆதியான மந்திரம்
பேறளிக்கும் மந்திரம் பிரமஞான மந்திரம்

பெற்றுச் சிறந்தவர்! சம்பந்தர் சிறுவர், குழந்தைப் பருவத்தில் அருள் பெற்றுத் திகழ்ந்தவர்! இப் பருவச் சிறப்புகள் அவரவர் மொழிகளிலும் திரண்டு தெரிகின்றன.

அப்பர் தேவாரம் உருக்கமுடையது; அது கிழப் பருவ இயல்பு! சுந்தரர் தேவாரம் மிடுக்கு மிக்கது; அது காளைப் பருவ இயல்பு! சம்பந்தர் தேவாரம் இனிமை இழைந்தது; அது குழந்தைப் பருவ இயல்பு! முறையே இவற்றிற்கேற்ற உறுதி, எடுப்பு, இளக்கம் என்னும் நடைச் சிறப்புகளும் அவற்றில் உண்டு.

சோதனையில் வெற்றிபெறுதலும் பிறருடன் இணங்கி அமைதலும் அப்பர் தேவாரத்தில் விளங்கும்; உரிமையால் தவறு செய்து பின் வேண்டி இரங்குதலும் அவ்வப் போதும் இன்புற்றும் துன்புற்றும் சோர்தலும் சுந்தரர் தேவாரத்தில் மிளிரும்; உளங் கவரும் திறங்கள் பலவும் தலைமைப் பாட்டு வெற்றி வீறும் எளிமை இனிமைகளும் சம்பந்தர் தேவாரத்தில் மிளிரும்; அவரவர் வரலாறுகளிலும் இப்பருவச் சிறப்புகள் அங்கங்கும் நிழலாடுதல் காணலாம்.

மேலும், அப்பர் பெருமான் 'சரியை' என்னும் திருநெறித் திறமும், ஞானசம்பந்த வள்ளல் 'கிரியை' என்னும் பெருநெறித் திறமும், சுந்தரர் செம்மல் 'யோகம்' என்னும் ஒரு நெறித்திறமும் தம் வாழ்க்கையாலும் வாக்காலும் விளக்க வந்த பெரியவர்கள்!

'சரியை' என்பது பொதுவாக இறைவன் பேர் புகழ்தல் முதலியன; 'கிரியை' என்பது இறைவன் திருவுருவை ஒளியிலும் வெளியிலும் எழுந்தருளச் செய்து பூசித்தல் முதலியன; 'யோகம்' என்பது இறைவன் திருவருளைக் காதலித்து அதனோடு ஒன்றுதல் முதலியன.

மாறிலாத மந்திரம் மயக்கறுக்கும் மந்திரம்
கூறிவாழும் வாழ்க்கையே கொடுத்தருள் குகேசனே

இம்மூன்றும் மனித வாழ்க்கையின் மூவகைப் பருவங்களிலும் இயல்பாய் நிகழ்வதற்குரியவை. வயது மிகுதியான கிழவர்கள் குழந்தைகளோடு கூடி ஏதானும் பேர் சொல்லிச் சொல்லி இன்புறுகின்றனர். தேவாரக் கிழவராகிய அப்பரும் ஞானசம்பந்தக் குழந்தையோடு கூடிக் கூடி இறைவன் பேர் பாடி மகிழ்ந்தனர்! இனி, உலகக் குழந்தைகள் ஏதேனும் பொம்மைகள், உருவங்கள் வைத்துக்கொண்டு விளையாடுவதைக் காணலாம். ஆதலால் தேவாரக் குழந்தையாகிய சம்பந்தரும் இறைவன் திருவுருவும் வழிபாட்டுக் கலன்களும் வைத்துக் கொண்டு அக்னி முதலிய வேள்விச் சிறப்புக்களோடு கூடிய சிவ பூசை செய்தல் என்னும் 'கிரியா பாதத்'தைத் திருக்கோயில்கள் தோறும் விளக்குவோராய்ச் சமயத் திறங்களுடன் விளங்கினர்! இனி, இளைஞராய் உள்ளவர்கள் தம் பருவ காலத்தில், தமக்கு ஒத்த ஓர் உயிரைக் காதலித்து அதற்குரிய உணர்ச்சி செய்கைகளுடன் ஒன்றுதலை உலகிற் காண்கின்றோம். ஆகவே, தேவார இளைஞராகிய சுந்தரமூர்த்திகள், தமக்கொத்த அருட் சிறப்பமைந்த பரவையாருடன் காதலிற் சிறந்து ஒன்றி வாழ்ந்தனர்.

இங்ஙனம் தேவார ஆசிரியர் மூவரும் இவ்வளவு இயற்கை இயைபுகளுடன் சைவ சமயத்தின் சமய குரவர்களாய் அமைந்தது இறும்பூது பயப்பதாய் இருக்கின்றது. மனித வாழ்வு இவ்வாறு சமய குரவர் வாழ்வால் ஒருமித்து விளங்குகிறது! இம்மனித வாழ்க்கையின் விளைவே ஞானம் என்பது! ஞானத்தால் பின்பு வீடு! இத்தகைய ஞான பாதத்தை விளக்க வந்த பெரியார் மாணிக்கவாசகர்! வாழ்க்கை கடந்த நிலைகளை அவர் வரலாறும் மணிமொழிகளும் விளக்குகின்றன !

இனி, மேற்கூறிய மூவகைப் பருவத்திலும் பருவம்

அன்னைபிதா சண்முகனே ஆதாரம் சண்முகனே
மன்னவனும் சண்முகனே மறைமுதலும் சண்முகனே

என்னும் சிறப்புக்குரியது இளமைப் பருவமேயாம். பருவ காலம் என்றாலும். பருவம் வந்தது என்றாலும் இந்த வழக்குகள், இளமைப் பருவத்தையே சிறப்பாய் உணர்த்தும். குழந்தைப் பருவத்தையும் கிழப்பருவத்தையும் உணர்த்தா. அதனால், பருவ உணர்ச்சிகளில் தலை சிறந்த உணர்ச்சி இளமைப் பருவ உணர்ச்சியே என்பது தெளிவாகத் தெரிகிறது!

வாழ்க்கை என்பதும் வாலிபப் பருவ நிகழ்ச்சிகளையே முதன்மையாய்க் குறிக்கும். ஆடவர் மகளிர் இரு பாலார்க்கும் இது பொருந்தும். ஒரு பெண் வாழப் போயிருக்கிறது என்றால், அது குழந்தை நிகழ்ச்சியன்று; அல்லது முதுமை நிகழ்ச்சியும் அன்று; அது இளமை நிகழ்ச்சியே! குழந்தையாயிருந்து பின்பு முதியோராய்ச் சாய்ந்து போதற்கிடையில் வாலிப நிலையிலுள்ள மக்களே பருவ மலர்களாவர்! வாழ்கை, அவர்கள் கையில் உள்ளது. ஆதலால், நல்வாழ்வில் வாழும் நோக்கமுடைய மக்களுக்கு வாலிப வள்ளலாகிய சுந்தர மூர்த்திகள் சிறந்த வழிகாட்டி எனலாம்.

வாழ்க்கையிற் சறுக்கி விழுந்தும் பின்பு தெளிந்து எழுந்தும் எப்படியோ நிலைகளைச் சமாளித்துக் கொண்டு உயர்ந்து ஓங்குகின்ற உலக வாழ்வினர்க்குச் சுந்தரமூர்த்திகளின் வரலாறும் வாக்குகளும் மிகவும் உணர்ச்சித் திறத்துடன் இணக்கமாய் உள்ளன. அவர் இறைவர்க்குத் தோழராதலுடன் மனித குலத்துக்கும் தோழராய் விளங்கிய வாழ்க்கை வீரராவர்!

உயர்ந்த பழக்க வழக்கங்களோடு கூடிய ஆதி சைவ அந்தண் குடியில் தோன்றி அரசத் திருவுருவின் வளர்ந்து மிக அழகிய வடிவுடன் திகழ்ந்து, வாலிபப் பருவத்தில்,

---

இன்னமுதும் சண்முகனே என்னுயிரும் சண்முகனே
நன்னயமும் சண்முகனே நாயகனும் சண்முகனே

தமக்கே உரிய வாழ்க்கைத் துணையைத் தேறாது மயங்கி வழுவியபோது பொருந்தாத் திருமணக் காலத்தில இறைவனால் தடுத்தாட்கொள்ளப் பெற்று, பின்பு உரிய வாழ்க்கைத் துணையைக் காதலித்து, அருளால் திருமணங்கூடி திருமண வாழ்க்கையின் முதற்கடன் தென்புலத்தார் என்னும் அடியார் பெருமக்கட்கு ஆளாகிக் கடனாற்றுதலாதலின் 'அடியார்க்கு அடியேன்' என்னுந் திருத்தொண்டத்தொகை அருளிச் செய்து, அடியார்க்கடியராகி, மற்றொரு நேரத்திலும் வாழ்க்கையில் மயங்கி, ஒரே துணைவியுடன் இருத்தல் எனும் அறத்திற்கு மாறுபட்டு வழுக்கி வேறொரு துணைவியையும் நாடி, அதனாற் பார்வை இழந்து பற்பல துயர்களிற் சிக்கி இடருண்டு, இடர்களை முயன்று நீக்கிக்கொள்ள விரும்பி இறையருளை வேண்டி வேண்டித் துயர் தீர்ந்து திருந்திய வாழ்க்கையராய்ப் பொருளும் கலையும் அருளும் மிகுந்து, முடி மன்னர் முதல் ஏழை எளியவர் வரை யாவர்க்கும் தோழராய்ச் சம உணர்ச்சியில் திகழ்ந்து இங்ஙனம் வாழ்க்கை வீரராய் உயர்ந்து ஓங்கிய வரலாறு சுந்தரமூர்த்திகளுடையது!

'யோகம்' என்பது, திருவருள் ஒன்றையே காதலித்து அதனுடன் ஒன்றி அதன் உதவியால் வாழ்க்கை யிடர்களினின்றும் நீங்கி வீரம் விளைத்தலாதலின், அதற்குக் காளைப் பருவமே ஏற்றது! தேவாரக் காளையாகிய சுந்தர மூர்த்திகள் இங்ஙனம் வாழ்க்கை வீறுமிக்க சிறந்த 'கர்ம யோகி' யாவர்!

உலக இளைஞர்களுக்கு இவர் செய்திகள் உயர்ந்த எடுத்துக்காட்டு! இவர் தேவாரம் இளைஞர் வாழ்க்கைக்குச் சிறந்த கலங்கரை விளக்கம்!

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

34-ஆம் பை

V. S. வேங்கடராமன்

(88—ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராஸக்கிரீடை, கண்ணன் குழலூதல்: காட்டில் வெண்ணிலவு அமுதம் பொழிந்தது. மல்லிகை முதலான மலர்கள் மணம் வீசின. கண்ணன் குழலையெடுத்தான். தேவகானத்தினும் மிஞ்சப் பண் ஒன்றைப் பாடினன்.

மங்கையரின் மன்மத விகாரங்கள்

கண்ணனது பாட்டைக் கேட்டதும் அக் கட்டழகிகளான கோபிமார்கள் கண்ணன் இருந்த இடத்திற்கு ஓட்டமாய் ஓடிவந்துவிட்டனர். பால் கறக்கும் பாவையர் பாதிப் பால்கூடக் கறக்கவில்லை. சில பெண்கள் அடுப்பில் பாலைப் பொங்க விட்டே கண்ணனிடம் ஓடிவந்தனர். சில மகளிர் சோற்றை அடுப்பிலிருந்து இறக்காமலே வந்தனர். சில மகளிர் வீட்டில் உறவினர் இலைகள் முன் வரிசையாய் அமர்ந்திருக்க ஓரிரண்டு கலங்களுக்கு மட்டும் சோற்றைப் பரிமாறி அங்கேயே சோற்றுத் தாம்பாளத்தை வைத்து விட்டு ஓடிவந்துவிட்டனர். சில பெண்கள் குழந்தைகட்கு இரண்டாவது பாலாடையை எறிந்துவிட்டுக் கூந்தல் அவிழக் காதில் ஜிமிக்கிகள் அசையக் கண்ணனிடம் ஓடி வந்துவிட்டனர். சில பெண்கள் கணவர்க்குப் பணிவிடை செய்ய அமர்ந்ததுமே குழலோசை கேட்க ஓடிவந்தனர். சில பெண்கள் உண்டுகொண்டிருப்பவர் மோர் வார்த்துக் கொள்ளாமலே ஓடி வந்தனர். சில நங்கையர் நல்லெண்ணெயைத் தலையில் வைத்துக்கொண்டதையே மறந்து ஓடி வந்தனர். சில மகளிர் நீராடிய உடம்பின் ஈரத்தில் பாதி போக்கிக் கொண்டதுமே ஓடி வந்தனர். சில பெண்கள் ஒரு கண்ணுக்கு மட்டும் மையிட்டுக் கொண்டதையே மறந்து ஓடி வந்தனர் சிலர் தாவணிகளை இடுப்பில்

சுற்றிக் கொண்டும் பாவாடைகளை மார்பிலிட்டுக் கொண்டும் ஓடி வந்தனர். சில பெண்கள் முத்து மாலைகளை இடுப்புகளிலும் ஒட்டியாணங்களைக் கழுத்துகளிலும் மாற்றி அணிந்து ஓடி வந்தனர். சில கோபிமார்கள் இரவிக்கைகளைப் போட்டுக் கொள்ளாமலேயே கண்ணனிடம் ஓடி வந்தனர்.

அப் பெண்கள் கணவரையும் தாய்மாரையும் தந்தைமாரையும் சகோதரரையும் உறவினரையும் அவர்கள் எல்லா வகைகளாலும் தடுக்கவும் அவர்கள் எல்லாரையும் அலக்ஷியமே செய்து கண்ணனிருந்த இடத்திற்கே ஓடி வந்துவிட்டனர். குழலிசை கேட்டு உருகித் தம்மையே மறந்தனர்.

வீட்டினுள் அடைக்கப்பட்ட பெண்களின் பேரின்பம்

கண்ணனிடம் போக முடியாதவாறு நம்மை இப் பந்துக்கள் செய்தார்களே என்று அக் கணத்தில் மட்டும். எண்ணிய அப் பெண்கள், கண்ணனது பிரிவால் ஏற்பட்ட துன்பத்தால் பாவம் அழியவும் தியானத்தில் கிடைத்த கிருஷ்ணன் தழுவக் கிடைத்த சுகத்தால் புண்ணியம் அழியவும் மோக்ஷப் பேரின்பமே அடைந்திருந்தனர்.

வஸ்து சக்தியான கண்ணனது அருள் இருக்கக் கோபிமார் கண்ணனையே கள்ளப் புருஷனாக எண்ணிய அப் புத்தி சக்தி ஒரு பலனையும் அக் கோபிமார்க்குத் தர இயலவில்லை. கண்ணனிடம் துவேஷங்கொண்டவர்களே மோக்ஷம் அடையும்போது மிகப் பிரியம் வைத்த கோபிமார் மோக்ஷத்தை எப்படி அடையாமல் இருக்கமுடியும்.

கண்ணனது பேச்சின் சாதுரியம்

ஸ்ரீ கிருஷ்ணன் அந்த இரவில் தன்னிடம் குழலிசையால் மயங்கித் தன்னிடமே தன்னைக் காண ஓடி வந்த அக் கோபிமாரைப் பார்த்துப் பின் வருமாறு இனிமையாகப் பேசத் தொடங்கினார். நான் அழைக்காதிருக்கும் போதே

என்னைப் பார்க்க நீங்கள் வந்தீர்கள். நான் எப்படி என் அன்பை உங்கட்குக் காட்டுவேன். கோகுலம் எல்லாம் சௌக்கியம் அடைந்து இருக்கிறதா? வந்த காரணம் என்ன? வழி எங்கும் இருட்டாகத் தோன்றவில்லையா? காட்டு மிருகங்கள் இரவிலன்றோ காடெங்கும் அலையும். கோபிமார்களே! கோகுலத்திற்குப் போங்கள்! பெண்கள் வீட்டைவிட்டுக் காட்டிற்கு இரவில் வரலாமா? உங்களுடைய கணவர் பெற்றோர் உடன் பிறந்தார் எல்லாரும் தேடுவார்களே. பந்துக்கட்கு வீணே பயத்தையும் கஷ்டத்தையும் தரலாமா? காட்டைப் பார்த்துவிட்டீர்கள்! கோகுலத்திற்குத் திரும்பிப் போகலாமே! தாமதிக்கக் கூடாது.

கண்ணன் பெண்கட்குச் சொல்லும் இல்லற உபதேசம்

கத்துகிற குழந்தைகளுக்குப் பால் புகட்டுங்கள். கத்துகிற கன்றுகளைப் பால் கறந்து பாலூட்ட விடவேண்டியது முறைதானே. பெண் ஜன்மம் பாக்கியம் அடையும். மாதர் கடமை மக்களைக் காப்பாற்றுவது. தாலி கட்டின கணவன் போக்கிரி யானாலும் அழகே யில்லாதவனானாலும் தள்ளாத கிழவனே யானாலும் முட்டாளே யானாலும் நோயாளியே யானாலும் ஏழையே யானாலும் அவனைக் காப்பதல்லவோ அவளது முதற் கடமை. குல ஸ்த்ரீக்கு வேறு ஆடவன் சேர்க்கையால் உண்டாகும் சுகம் அவளது சுவர்க்கலோக வாஸ புண்ணியத்தை அழித்துவிடும். புகழைப் போக்கும். பயத்தைத் தரும். வீணாகும். பலர் வெறுப்பையும் சேர்ப்பிக்கும். என் பக்கத்தில் நீங்கள் இருந்தால் அவ்வளவு பக்தி உங்களுக்கு உண்டாகாது. அவ்வளவு பக்தி என்னிடம் உங்களுக்கு உண்டாக வேண்டுமானால் என் வரலாற்றைத் தூரத்திலிருந்து கேளுங்கள். தூரத்திலிருந்து தியானியுங்கள். என் பெயர்களை எப்போதும் சொல்லிக் கொண்டிருங்கள். இப்போது நீங்கள் எல்லோரும் வீடு போய்ச் சேருங்கள்.

கோபிமார்களது சரியான மறுமொழி

கண்ணபிரானது உபதேசத்தைக் கேட்டதும் கோபி மார்கள் கவலையோடு முகங்களைத் தொங்கவிட்டனர். கட்டை விரல்களால் பூமியைக் கீறினர். அழவும் தொடங் கினர். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கண்ணனை நோக்கிக் கோபிமார்கள் பேசத் தொடங்கினர். பிரபோ! உங்கள் பாத மூலத்தை அடைந்தோம். எங்களைத் தள்ளா தேயும். நீர் குரு அல்ல. நாங்கள் சீடர்கள் அல்ல. எங்கள் ஆத்துமாவே நீங்கள். தங்களைவிட எவரும் எங்கட்குப் பெரியவர் ஆகமாட்டார்கள். கணவராலும் பிள்ளைகளாலும் எங்கட்கு ஏது பயன்? பல பிறவிகளில் உம் பாதங்களில் கொண்ட எங்கள் பற்றை உடனேயே போக்கிக்கொள்ள விடாதீர். எங்களால் ஓரடி நகரவும் முடியாது. கோகுலம் போய் எதையும் செய்யமாட்டோம். எங்களைக் குளிரப் பாரும். எங்களைத் தழுவும். இல்லை யானுல் இங்கேயே எல்லோரும் உயிர் துறப்போம். ஸ்ரீ தேவியைப் போலவே நாங்களும் உங்கள் பாத தூளியைப் பெறக் காத்திருக்கிறோம். உம்முடைய திருவடிகட்குத் தொண்டு செய்வதே எங்கள் வேலை. நாங்கள் ஏழ் ஏழ் பிறவியும் தங்கட்கே அடிமையானேம். எங்கள் துன்பங் களை நீக்கவே நீங்கவே நீர் கோகுலத்தில் பிறந்தீர். எந்தப் பெண் உங்களைப் பார்த்து மயங்காமல் இருப்பாள். தங்கள் கருணையால் நாங்கள் இப் பேரின்பத்தைச் சேர்ந்து பெற்றோம். எங்களை ஆசீர்வதிக்க" என்று வேண்டினர்.

நாதா! பசுக்கள் பறவைகள் மரங்கள் மான்கள் என்ற இவையெல்லாம்கூட உமது குழல் ஓசையைக் கேட்டு உடல் சிலிர்த்தனவே.

துடிப்பவர் துன்பந் துடைக்கத் தோன்றும் தோன்று உறவினரே! முன்னே தேவருலகங் காக்க வாமனராக அவதரித்தீர். இப்போதோ கோகுல வாசிகளின் பயத்தை யும் துன்பத்தையும் நீக்க ஆயர்பாடியில் பிறந்துள்ளீர். இது நிச்சயம்.

அந்து வாக்கள் சண்முகனே அறுசமயம் சண்முகனே
தத்துவமும் சண்முகனே தற்பரமும் சண்முகனே

"எங்கள் தலையில் தட்டிச் சபதம் செய்தருள்க." "நீங்கள் தான்" என்று உங்களையே தீர்மானிக்க வைக்கிற உமது குழலோசையைக் கேட்டதுமே மூவுலகங்களும் தம் தம் தொழில்களை விடுகின்றன. இந்த உமது திவ்ய ரூபத்தை நேரில் காணும் மகா பாக்கியம் பெற்ற பிறகு எங்கள் வேலைகள் எங்களை விட்டுப்போவதில் வியப் பென்ன? நெஞ்சு வெடித்துப் போகப் பார்க்கிற எங்கள் உயிரை உங்களுடம்பேயாம் இச் சரீரத்தில் நிறுத்த, உங்கள் திருக்கைம் மலரை எங்கள் நெஞ்சிலிட்டுக் காத் தருளுமே. "உங்கள் எல்லோரையும் புறக்கணிப்பதில்லை" என்று எங்கள் தலையில் தட்டி உறுதிமொழியும் மலர்ந் தருளுமே. என்றெல்லாம் சொல்லிப் புலம்பினர்.

யோகேசுவரர்கட்கும் ஈசுவரனை கண்ணன் அவ் வாயர்குல மகளிர் அகங்கரைந்து அழுத அழுகையைக் கண்டு, அவரின் மொழி கேட்டுச் சிரித்துக்கொண்டுச் சுயம் ஆனந்த ரூபியாகி, அவர்களைக் களிப்பித்து அவர்களால் களிப்புற்றார் போல நடித்தனர்.

பல நக்ஷத்திரங்களின் நடுவே சந்திரன் விளங்கல்

நூறுகோடிக் கோபிமார் நடுவில் கோபிமாரும் தானு மாகப் பாவ ராக தாளங்கள் இயைந்த இசை விழாவில் ஈடு பட்டுக் கேட்டும், பாடியும் வைஜயந்தி மாலையாடத் தானும் ஆடியும் புன்னகை பூத்துப் பிருந்தாவனத்தைப் புத்தொளி கொள்ளச் சிரீ கிருஷ்ணன் செய்து மகிழ்ந்தார். மேலும் கோபி மாருடைய கூந்தலைப் போலப் படிப்படியாக நெளிந்து படிந்த யமுனை மணல் திட்டு ஓரம் உலாவினர். குளிர்ந்த மணமேவிய காற்றும் வாங்கினர். சில மங்கையரின் தோள் களில் கைகளைப் போட்டு மதயானையென நடந்தார். சில மாதரைத் தழுவினர் சில பெண்களின் சுருட்டை முடி யினைத் தொட்டு வியந்தார்.

சில பெண்களின் தொடைகளையும் கொங்கைகளையும் தொப்புட் பக்கங்களையும் தொட்டு நலம் பாராட்டினர்.

சத்து சித்தும் சண்முகனே சதானந்தம் சண்முகனே
சத்திசிவன் சண்முகனே சத்தியமும் சண்முகனே

நகக்குறியும் பற்குறியும் அழுத்தினர். கண்ணடித்தார். காம நகை செய்தார். அக் கோபிமாரை இவ்வின்பங்களையெல்லாம் அடைய வைத்து, இவற்றுக்கு மேலாம் பேரின்பத்தையும் அடையவே செய்து தங்களையே தாங்கள் மறந்திட மகிழ்வித்தார்.

தாம் கோலோக கன்னிகள் என்று கோபிமார் உணர்தல்

அக் கோபிமார் ஒவ்வொருவரும் தாம் பேறவேண்டிய இன்பம் அத்தனையும் பெற்றுராகித், தங்களைப் பிறிதோருலகத்து மங்கையராகவும், பிறமங்கையரைப் பெண் பிறவி எடுத்த பேதையராகவும், "கண்ணனைக்கண்டோம்" என்ற இறுமாப்பினுல் தலை நிமிர்ந்து நின்றுர்கள்.

கோபிமார்களின் கர்வத்தை அடக்குதல்

கோபிமார்களின் சௌபாக்கிய மதத்தைக் கண்டதும், கண்ணன் அம் மதத்தை அழிக்கவும் பிறகு அவர்கட்கு அருளவும் அந்த யமுனையின் மணல் மேட்டிலேயே மறைந்தருளினர்.

ஆண்பித்தேறிய அப் பெண்களின் போக்கு இப்படித்தான்

என்னை எல்லோரும் இராமாவதார காலத்தில் "பெண் பித்தேறியவன் இராமன். அதனுல் தான் சீதையைக் காணுத போது இராமன், காட்டில், யானையே! கண்டாயா? மானே! பார்த்தாயா? புலி! உன் கண்ணிலே சீதை அகப்பட்டாளா? மருத மரமே பார்த்தாயோ! அசோக மரமே பார்த்தனையா? வில்வ மரமே கண்டாயோ! மலையே சொல்லாயா? ஆறே அமிழ்த்து வாயோ என்றெல்லாஞ் சொல்லிப் புலம்பினன்." என்று (இப் பெண்கள் என்னைப் பரிகாசஞ் செய்தார்கள்.) சொல்லி வியந்து வியந்து நகைத்தார்கள். இப்பொழுது ஆண் பித்து ஏறிய இப் பெண்கள் என்ன

பாடு படுகிறார்கள் என்பதை உலகங் காணப் போகிறது. கண்டபின் உலகம் இதனை மறக்காது என்று உலகத்தில் உள்ள ஆண் பெண்களின் உறவு இயல்பினை வெளிப் படுத்தத் திருவுள்ளங்கொண்டார் போலக் கண்ணபிரான், திடீரென அப் பெண் யானைகளின் முன் மறைந்தருளினார். கண்ணன் மறைந்ததும் சில கோபிகட்குக் கண்ணனது நடையே மனக் கண்முன் நின்றது. அவனது அன்பே சிலர்க்கு நெஞ்சிற்பட்டது.

அவனது புன்னகையே சிலர்க்கு மனக் கண்முன் பொலிந்தது. கண்ணன் பார்க்கிற தாகவே சிலர் நினைத் தார்கள். கணண்ணன் பேசுவதாகவே சிலர் எண்ணினார் கள். கண்ணன் விளையாடுவதாகவே சில பெண்கள் பேசினர்.

(தொடரும்)

சிவநேயச் செல்வர்கள் 5.

கன்னிப் பெண்கள்

(ரசபதி)

மாபெரும் சிறப்புடையது மதுரை. பரத்தை ஒருத்தி அப்பதியில் இருந்தாள். மங்கை அவள் பெயர் மாணிக்க வல்லி. இளங்காளைகளை வயப்படுத்தி, பொருளைப் பறிப் பது அவள் குலத்தொழில். செய்வது சிரழிந்த செயல் எனினும், பூர்வ புண்ணியப் பயனால் அவள் இரு புதல்வி யரைப் பெற்றாள். ஒரு மகள் பெயர் ஞானம். மற்றொரு மகள் பெயர் கோதை.

நீராட்டி, பாலூட்டி, அணிபூட்டி, தாலாட்டி, வாழப் பிறந்த மகளிரைத் தாய் வளர்த்தாள். கவிழ்ந்து, தவழ்ந்து,

இருந்து, எழுந்து, நடந்து, ஓடி ஆடிப் பிள்ளைப்பிறைபோல் பெண்கள் வளர்ந்தனர். பேதைப் பருவம் கடந்தனர்; பெதும்பைப் பருவம் பிறந்தது. கலைகள் பலவும் கற்றனர். சிவத்தை இடையறாது சிந்தித்தனர். அமைதி மனத்தில் அமைந்தது.

மகளிர் வளர்ச்சி கண்டு, மகிழ்ந்தது மாணிக்கவல்லி மனம். எனினும், பூர்வ புண்ணியப் புனிதையர் தன் மகளிர் என்பதை, நினைக்கவே அவளுக்கு நேரமில்லை. கலவிக்கலை ஒன்றே இனி கற்க வேண்டும் இவர்கள் என்று, எண்ணி உருண்டது அவள் இருண்ட மனம். விரகம் மிகுதலுக்கான சித்திரங்களை, வீடு முழுதும் சித்திரித்தாள்; புறா முதலிய பறவைகளை, யாழ் முதலிய கருவிகளைத் தொகுத்தாள்: அவள் மன நிலை அது.

* * *

கன்னியர்க்கோ, கண்ட கண்ட பொருள் அனைத்தும் சிவமாகக் காட்சி யளித்தன. நடமாடும் கோயில்கள். அடியார்கள். சிறந்த அவர்களை, சேவிக்கும் சிந்தனை பிறந்தது. தேடித் தேடித் திரிந்தனர். கண்ட இடமெலாம், அவர்களைத் துதித்துத் துதித்துத் தொழுதனர்; அவர்கள் அடிமலர் சூடிய அவர்கட்கு, அடியவர்கள் செய்த உபதேசங்கள் அருமை விருந்தாயிருந்தன. ஒவ்வொருநாளும் சிவவாக்கியத்தை உருவேற்றினர். அதனால் உண்டான தெய்வப்பொலிவு திமிதமிட, அழகு ராணிகள் போல் நிமிர்ந்து கம்பீரமாக நின்றனர்.

* * *

வாய்மையுடைய அடியவர் ஒருவர் வந்தார். கனிந்த மனக் கன்னியரைக் கண்டார். அருள் நூல் ஒன்றை அளித்தார்.

நக்கீர தேவர் என்பவர் ஒரு நாயனார். பயனுள அவர் நூற்கள் பல. அவைகளுள் ஒன்று இது. சிறந்த இந்நூல், பதினோராம் திருமுறையைச் சேர்ந்தது. கயிலைபாதி காளத்திபாதி என்பது இதன் பெயர். பாக்கியவதிகளாகிய நீங்கள்,

---

ஒப்பற்ற தெய்வமிந்த உலகினிலே சண்முகனும்
அப்பனுக்கும் காதினிலே ஐந்தெழுத்தைச் சொன்னவனும்

இந்த ஞான அந்தாதியைப் பாராயணம் செய்யுங்கள்! காளத்தியப்பர் திருவருள் கைவரும். நிர்ணயித்து உரைக்கும் இதனை நிச்சயமாக நம்புங்கள் என்றுார்.

கற்று வல்ல கன்னியர் இருவரும், அருமையை யுடைய அந்நூலின் பெருமையை அறிந்தனர்.

'மயலைத் தவிர்க்கநீ வாராய்! ஒருமூன்று
எயிலைப் பொடியாக எய்தாய்—கயிலைப்
பருப்பதவா! நின்னுடைய பாதத்தின் கீழே
இருப்பதவா உற்றுள் இவள்!'

'இவளுக்கு நல்லவாறு எண்ணுதிரேல், இன்றே
தவளப் பொடியிவள்மேல் சாத்தி,—இவளுக்குக்
காட்டுமின்கள் காளத்தி! காட்டிக் கமழ்கொன்றைச்
சூட்டுமின்கள் தீரும் துயர்!'

இத்தகைய அரிய பாடல் நூறு கொண்ட அந்நூலை, ஓத ஓத உள்ளம் பாகாய் உருகியது. அருவிபோல் பெருகியது ஆனந்தக் கண்ணீர். நாள்தோறும், பாடல் நூறும் பாராயணத்தில் இருந்தது.

* * *

மகளிர் போக்கைக் கண்டு மனமிடிந்தாள் மாணிக்கவல்லி. ஒருநாள் எதிரில் இருந்து கொஞ்சிக் குலவி, புழுங்கியிருந்த தன் மனப்போக்கைப் புலப்படுத்தலாயினுள்.

ஞானம்! பூங்கோதை! இதுவரை நீங்கள் கற்றது போதும்; இனி என் உபதேசத்தைக் கேளுங்கள்!

காலத்தில் விதைத்துப் பயன் காணும் உழவர் போல், காளையர் வந்து கவிகின்ற காலத்தில் அவர்களிடத்தில் நீங்கள் காசு பறிக்க வேண்டும். நீர்மேல் குமிழி இந்த இளமை! இது நீங்கிய பின், உங்களை ஏன் என்று கேட்பவர் எவர்? கட்டழகை யுடைய உங்கள் உறவு பெற காத்திருக்கின்றனர் பலர். எல்லாச் சூழ்நிலையும் இருக்க, இப்படி ஏமாந்து இருப்பது முறைதானு? வந்தவரை மயக்க மணியுண்டு, மந்திரம் உண்டு, மருந்துகளும் உண்டு.

அப்பனுமே சாமியென்று அழைத்த வொரு காரணத்தால்
இப்புவியில் சாமிநாதன் என்றன்பர் இயம்புவரே

கல்வி கண்டேன்! உங்கள் கட்டழகும் கண்டேன்! காலம் பார்த்துப் பணம் திரட்டக் காத்திருந்த எனக்கு, நீங்கள் காட்டும் கைம்மாறு இது தானு? தாய்மைக் குலமரபைத் தழுவுவதால் பயனுளது. சிந்தனை செய்து பாருங்கள்! நான் சொல்வதை இன்று மறுத்தால், நீங்கள் எதிர்காலத்தில் வருந்த நேரிடும்; ஆம். இப்போதே எச்சரிக்கிறேன்!

அதைக் கேட்ட மகளிர்க்கு, எள்ளும் கொள்ளும்போல் இதயம் வெடித்தது; அம்மா! மின்னல் நிலையது உலக வாழ்வு. இதனை மறந்து, பேதைமையால் தீவினையை பெருக்கலாமா? பரமனைக் காட்டும் பஞ்சாக்கரம் பயின்ற நாவால், மனிதரை வசீகரிக்கும் மந்திரத்தையா மனனம் செய்வது?

பசு மலத்தைப் பார்த்தோம். குளிர்விக்கும் ஐந்து வில்வம் கூட்டினேம். நீற்றினேம். தீட்சித்தோம். களங்க மற்ற அதன் சொருபம் கண்டோம். இதைப்போல் ஆன்ம அழுக்கழிந்து, எங்கட்குத் தூய்மை எய்துவது என்றே என்று எண்ணுதும் எண்ணுகிறேம். கண்ணீர் சிந்து கிறேம். பூசுகிறேம் நீறு. புளகிக்கிறது உடலம். இதற்கு அயலாய், ஆக்கை நாற்றம் போக்க, கஸ்தூரி களபமாதி பூசுவதால் என்ன பயன்?

விளக்கிருக்கும் வீட்டில் இருள் இருப்பது இல்லை. அதுபோல், அறிவு சொருப அமலன் இருக்கும் அகத்தில், அறிவழிக்கும் சூழ்நிலை அடர்வதுவோ இல்லை. தத்துவங் கட்கு அதீதமான தனியிடத்தில், எம்பெருமானைக் கலந்து இன்பமுற வந்துளது இந்த உடல். இதை மறந்து, மாண்டு போகும் மனித இன்பம் மரபாமோ தாயே? குல தருமம் உன் கூத்து; சிவ தருமம் எம் சிந்தனை.

அம்மா! ஐயோ! என்ன அழுகிருயே! இவ்வளவு தானு நீ? இப்பியில் பிறந்த முத்தால் இப்பிக்கு என்ன பயன்? அதுபோல், எங்களைப் பெற்றதன்றி உனக்குப் பேறு வேறு இல்லை. இன்றுமுதல் மறந்து விடு எங்களை! என்று, தாமும் அழுது கொண்டே அடுத்த அறையில் புகுந்தனர்.

அறுத்தமயில் உயிர்த்து வரும் ஆறுமுகன் சன்னிதியில்
அறுத்தநாவும் வளர்ந்திடுங்காண் ஆறுமுகன் பேரருளால்

மகளிரின் உறுதி கண்டு மாணிக்கவல்லிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. மணிமந்திர மருந்துகளால், யாரேனும் என் மகளிர்க்கு உலக உணர்வை உண்டாக்கினால், தக்க பரிசு தருகிறேன் என்று அழுது எவர்க்கும் அறிவித்தாள். அன்னையின் செயலை மகளிர் அறிந்தனர். காளத்திநாதர் காப்பர் என்று கவலையின்றி யிருந்தனர். ஞான அந்தாதிப் பாராயணம், பக்தி பரவசத்தோடு தொடர்ந்து நடந்தது. நாள்கள் பல இடையில் நடந்தன.

* * *

தென் கயிலைத் தெய்வம் காக்க! காளத்தி நாதர் காக்க காக்க என்று, தேனினும் இனிய வார்த்தை தெரு வாயிலில் கேட்டது. யார் அது என்று அறிய, வாயிலில் கன்னியர் வந்து பார்த்தனர்.

யாத்திரிகரான சாதுக்கள் இருவர். ஆம். பார்க்கிற போதே தெரிகிறதே! வாய்த்த அன்பொடு கன்னியர் வணங்கினர்.

ஸ்வாமிகளே! உங்கள் ஊர் யாது? இப்போது எங்கு செல்கிறீர்கள்?

அம்மைமீர்! தலம் பல தரிசித்தோம்; புனித காளத்தியைச் சேவிக்கப் போய்க் கொண்டிருக்கிறோம்!

அப்படியா! காதலித்த காளத்தியப்பனை, எங்கட்கும் காணும் காலம் வந்ததோ என்னவோ. ஆஹா! எத்தனை நாளாக இருந்தது இந்த ஆர்வம்! அங்கு எங்களையும் அழைத்துச் செல்லுங்கள்! ஸ்வாமிகளே! இதனால் உங்கட்கு ஒரு கோடி புண்ணியம் உண்டாகும்!

கல்லும் முள்ளும் கலந்த வழியில் கஷ்டம் பலவுள. இந்த இளம் பருவத்தில் உங்களால் நடக்கவும் முடியாது. கன்றிழந்த பசுவைப்போல், தாய் உங்கள் பிரிவு பொறுது கதறுவள். எங்கட்கும் பழி உண்டாகும். எனினும்,

'காளத்தி காணப் பெற்ற கண்களே கண்கள்; என்றும்
காளத்தி நகரிற்(கு) ஏகும் கால்களே கால்கள்; என்றும்

சருக்கரையாம் ஆற்றுமணல் சண்முகன்றன் சத்தியினுல்
அறுமுகன்றன் சித்துக்களை அறைகுவதும் எளிதலவே.

காளத்தி புகும்கருத்தே கருத்(து;)என்றும் கயிலைநாமக்
காளத்தி புகழும் நாவே நா' என்றும் கற்றோர் சொல்வர்.

ஆஹா அப்படியா ஸ்வாமி! வேட்கையைப் பெரிதும் விளைவிக்கின்றது நீங்கள் பாடிய பாடல். இடைவழியின் தடையால், எங்கட்கு துன்பம் ஒன்றுமே தோன்றுது. கனிந்த உங்கள் மனத்தில் அந்தக் கவலையே வேண்டா. உலகர் பழிப்பு ஒரு பொருளல்ல. செல்ல வழியறியா எங்களைக் கைவிடாமல், எப்படியாயினும் அழைத்துச் செல்லுங்கள்! என்று வனிதையர் இருவரும் வணங்கினர்.

சரி. அப்படியானுல், இன்று இரவு 12 மணிக்கு, ஊர்க் கோடியில் உள்ள ஆலமரத்தின் அடியில் இருப்பம். செலவுக்குப் பணம் சேகரித்துக் கொண்டு, அங்கு வந்தால், உங்களை அழைத்துச் செல்கிறோம்;வருகிறோம் என்று அவர்கள் விரைந்து சென்றனர்.

* * *

பகல் பொழுதைச் சபித்து, காலத்தை எதிர்பார்த்திருந்த கன்னியர்க்கு இரவுப் பொழுதும் வந்தது. அன்னை மெய்ம்மறந்து உறங்குகின்றுள். ஊர் அடங்கியுளது. பயங்கரமான நள்ளிரவு. தங்கள் இன்பப் பெண்மைக் காப்பிற்கு இரு தோழியர். அவர்கள் தலையில் செலவிற்குப் பணப்பெட்டி. ஆடை ஆபரணங்களால் தம்மை அணி செய்து கொண்டு, அடிமேல் அடிவைத்து, சந்தடியின்றி வெளிப்பட்டனர். சாதுக்கள் குறித்த இடத்தை யடைந்தனர்.

* * *

ஐயன்மீர் ! வணக்கம் !

ஓ! குறித்தபடி வந்தீர்கள்! அதுசரி. குணவதிகளான நீங்கள், இந்தத் தோழியர்களைக் கூட்டி வந்தது ஏன் ?

ஸ்வாமி ! நாங்கள் பெண்கள்; எங்கட்குத் துணை இவர்கள்; இதை மட்டும் மறுக்க வேண்டா !

சண்முகனைப் பாடுமின்கள் சண்முகனைப் பணிந்திடுங்கள்
சண்முகனை நாடுமின்கள் சண்முகனை நட்புறுங்கள்.

சரி சரி என்று புறப்பட்டனர். போகிறார்கள்; போய்க் கொண்டே இருக்கிறார்கள். செல்லும் வழியெல்லாம் சிவனடியார்.

என்ன வியப்பு! நம்மைப்போல் கண்விழித்து எங்குச் செல்லுகிறார்களோ இந்த அடியார்கள்? என்றனர் கன்னியர்.

ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு பயித்தியம். உலகமே பயித்தியக்காரரை உருவாக்கும் பெரிய பள்ளிக்கூடமாய் இருக்கிறது என்றார், இருவரில் ஒருவரான தடித்த சாது.

கும்பகோணம், சிதம்பரம், காஞ்சி முதலிய தலங்கள் பலவற்றைத் தரிசித்தனர். தங்கும் இடங்களிலும் ஆயிரவர் சங்கரன் அடியவர். கூடிக் கூடி அடியவர்கள் குனித்துக் களித்துச் சிரிக்கின்றார். அந்நிலை, சாதுக்கட்கும் ஆச்சர்யத்தை அளித்தது.

* * *

காளத்தி எல்லையை மிதிக்க இன்னும் இருகல் தூரம் உளது. மாலை 5 மணி. அந்த இடத்தில்தான் நம்பன் அடியவர் எவரும் நடமாடவில்லை.

அப்படியே நில்லுங்கள் ! என்று அதிர்ந்து வந்தது வார்த்தை. என்ன இது என்று கன்னியர், ஏறிட்டு நோக்கினர். தொடை நடுங்கி, வீறிட்டுக் கூவினர் தோழியர். காரணம் என்ன ?

வழித்துணையாகி வந்த சாதுக்களின் முகத்தில், குரூரமானகொலைக்குறி. காஷாயத்துள் மறைந்திருந்த கத்திகள், பளபள வென்று இருவர் கையிலும் பயங்கரமாக இருக்கின்றன.

முதலில் ஆபரணத்தைக் கழற்றி வையுங்கள் ! என்று அதட்டினான், தர்ம சாதுபோல் வேடம் தாங்கிய தடியன்.

நடுங்கியது கோதை உடல். களங்கமற்ற சாதுக்கள் வேடத்தில் கள்ளர்கள். ஆபரணங்களையும் பணத்தையும் கவர ஆதிமுதல் திட்டம். இடைவழியில் எங்கும் அடியர்

சண்முகன்முன் நடித்திடுங்கள் சண்முகனை நம்பிடுங்கள்
சண்முகனை நினைத்திடுங்கள் சந்ததமும் பக்தர்களே

மயம். வகையாக சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. இங்கு எவரும் இல்லாமையால், எண்ணிய செயலைச் செய்யத் துணிந்தனர். இவ்வளவுதான் செய்தி என்று நொடியில் இவைகளை ஊகித்து உணர்ந்த ஞானம், கலகல என்று நகைத்தாள். காளத்தியப்பன் கருணையிருந்தால், இப்போதும் காப்பு வரும் என்று பிறங்கும் மனவுறுதி பிறந்தது.

'அடைந்துய்ம்மின் அம்மானை! உம் ஆவிதன்னைக்
குடைந்துய்ய எண்ணியவெங் கூற்றம்—குடைந்தும்
கண்ணுள்ளே பார்க்கும் பொழுது கயிலாயத்(து)
அண்ணலே கண்டீர் அரண்'

என்று பக்தி பரவசத்தோடு மெல்லப் பாடியபடியே, நகைகளை ஒவ்வொன்ருகக் கழற்றினள் ஞானம்.

'அரணம் ஒரு மூன்றும் ஆரழலாய் வீழ
முரணம்பு கோத்த முதல்வன்—சரணமே
காணுமால்; உற்றவன்றன் காளத்தி கைதொழுது
பேணுமால் உள்ளம் பெரிது'

என்று கண்ணீர் வாரப் பாடிக்கொண்டே, தன் அணிகலன்களைக் கழற்றினள் கோதை. தோழியர், தலைகுனிந்து, நெஞ்சு திடுக்கிட நின்றிருந்தனர்.

உம். சீக்கிரம்! என்று அதட்டினர் சாதுவேடச் சதிகாரர்.

* * *

யாரடா அங்கே ? அதிர்ந்தது குரல்; அதிர்ந்தது பூமி; அதிர்ந்தது திருடர் இதயம். நொடித்துத் திடுக்கிட்டு நோக்கினர். பின்புறம் இருந்து ஓடி வருகிருர் ஒருவர்.

என்ன அதிசயம்! கையில் புட்பக் குடலை. கம்பீரமான தோற்றம். சிவசின்ன தாரணம். பலரை வீழ்த்தும் ஆற்றல் படர்ந்து, உருண்டு திரண்டு உயர்ந்த தோள்கள்.

கள்ளர்கள் நடுங்கினர். கைவாள் நழுவி, டங்கென்று நிலத்தில் விழுந்தது. அதன்மேலும் அங்கிருக்க அஞ்சிய திருடர்கள் இருவரும், திசைக்கு ஒருவராய் ஓடி ஒழிந்தனர்.

* * *

யார் அம்மா நீங்கள்? எப்படி இவர்களிடம் அகப்பட்டீர்கள்?

நமஸ்காரம் ஸ்வாமி! எங்கள் வரலாறு இது என்று ஆதியோடந்தமாகக் கூறிய கன்னியர், ஆபத்தான காலத்தில் வந்து உதவிய தாங்கள் யார் என்று வினவினர். தோன்றாத் துணையாய் வந்து தோன்றினர்; உதவினர் என்ற எண்ணத்தால், அவர்முன் தோழியர் இட்டது தொண்ணூறு கும்பிடு.

இருப்பது காளத்தி எனினும், எங்கும் பணி எமக்கு உண்டு. வாருங்கள் காளத்தியைக் காட்டுகிறேன்! நகைகளை எடுத்து அணிந்து கொள்ளுங்கள்!

ஏன் பயந்து அப்படிப் பார்க்கிறீர்கள்? ஓ! போலிப் போர்வை எதனிலும் பெருகுவதால், உண்மை சொருபமும் ஐயங் கொண்டு எண்ணப் படுகிறது; அப்படி என் விஷயத்தில் சந்தேகம் வேண்டா என்று, நகைமுகமாகி முன்னேறினார் அந்த அடியார். நலம் சிறந்த கன்னியர், வேறு விதியின்றி, அந்த அடியரைத் தொடர்ந்து நடந்தனர்; அவர்கள் சித்தம்மட்டும் சிவ சிவ சிவ சிவ என்று சிந்தித்துக் கொண்டே இருந்தது.

* * *

ஐவரும், காளத்தியை ஐந்துநிமிஷத்தில் அடைந்தனர்.

முன்னுக்கு வாருங்கள்! காட்டுகிறேன் என்று, கன்னியரை முன்னுக்கித் தாம் பின்னுனர் அடியார்.

எனக்குப் பலபணி இருக்கிறது. அதோ பாருங்கள்! அதுதான் காளத்தி மலை. இதோ தெரிவது துர்க்கை மலை. அதோ தெரிகிறதே அதுதான் நீலபர்வதம்! இதுதான் பொன்முகரி நதி. இனி உங்கட்கு ஒரு இடையூறும் இல்லை. நான் போய் வருகிறேன்!

தாங்கள் எங்குப் போகிறீர்கள்? என்று திரும்பி நோக்கினர் நால்வரும். அடியவர் இல்லை.

என்ன அதிசயம்! ஆம். அவர் நின்ற இடத்தில் அற்புத ஒளி எழுந்து அடங்கியது.

கூறுமின்கள் சண்முகன்றன் குணமுறுந் திருப்புகழை
விறடைந்து மேதினியில் விஞ்ஞானம் எய்துவிரே

ஆஹா! காளத்தியப்பரா காக்க வந்தவர்? வழிவிடும் துணையாகி வந்தாரை, அமுதம் பெற்று இழந்த அறிவிலிகள் போல், விட்டுவிட்டோமே என்று வேதனை யடைந்தது மனம்.

தோழியருடன் விரைந்தனர். பொன் முகரியில் இறங்கினர்; பரம அருள் வெள்ளம் இது என்பது அவர்கள் பாவனை. நீராடினர்; நெற்றிக்கும் நீறூடினர். ஞான அந்தாதியைப் பாராயணம் செய்தபடி, சந்நிதியை அணுகினர். வீழ்ந்து வணங்கி எழுந்தனர்.

செவ்வொளியும் மரகத ஒளியும் சிவலிங்கத்தி லிருந்து எழுந்தது. புளகிதம் கொண்ட கன்னியர், அப்புனித ஒளியிற் புகுந்தனர். ஆ! அவ்வளவுதான். அவ்வொளியும் திடீரென்று அடங்கி மறைந்தது. என்ன அதிசயம்!

திகைத்த தோழியர், எங்கே எம் தலைவியர்? என்ன இது? ஆ என்று கதறி யழுதனர்.

அவர்கள் பெயரால், இலிங்கப் பிரதிட்டை செய்து வழிபடுக என்று ஒரு இன்ப அசரீரி எழுந்தது.

அப்படியே செய்கிறோம் என்று, இருந்த பொருள் ஆதரவால், கன்னிலிங்கம் என இரு லிங்கங்களைப் பிரதிட்டை செய்து, வாய்மைப் பாங்கியர் பலநாள் வழிபட்டனர். அதன் பயனுக, காளத்தியப்பர் அருள் நிழலில், அவர்களும் கலந்து இன்பம் கண்டனர். இத்தகை அற்புதம் பல எண்ணி,

'வாளால் மகவரிந்(து) ஊட்ட வல்லேன் அல்லேன்; மாது [சொன்ன
சூளால் இளமை துறக்க வல்லேன் அல்லேன்; தொண்டு [செய்து
நாளாறில் கண்ணிடந்(து) அப்ப வல்லேன் அல்லேன்; [நானினிச் சென்று
ஆளாவ(து) எப்படியோ? திருக்காளத்தி அப்பனுக்கே!'

என்று மகிழ்ந்து பாடுகிறது நம் மனம்

வாழ்க அடியவர்!

கலியுகத்தில் சண்முகனே கண்கண்ட பரப்பிரமம்
கலிமலத்தை நீக்கியவன் கடிதினிலே கதியளிப்பன்

THE GLORY OF PREMA

Of the illustrious path-finders who have solved the problem of misery for the human kind, there is perhaps none who is more entitled to immediate and profitable attention than Mira Bai. From her sayings and songs one can discover the prophet of prema in her. The ecstatic love of God as the surest and unfailing approach to heaven is undoubtedly the dominant message of her life. Love amongst men is mostly barter. In a sense it is commercial. It is not the result of an inspiration from within, nor the flood of soul's artesian depths. In most cases it is a reaction from within to something perceived from without and vice versa. The lord before the creation is said to have been of prem and the whole creation is said to be but a faint expression of that divine nature.

Prem is the birth right of every being, but can be perceived only by inversing the outlook of man from the outside to the inside. The quality of the soul is not different, according to all the schools of philosophic thought, from the qualities of the Godhead. Tho *atman* of the soul is like unto God, if not Himself. Hence Bhagwan is Prem. Bhakta is Prem. Bhakti is Prem. The *tripute* is lost in the oneness of realisation. To take an illustration, A is the heir to B. A sues B for a property. B dies and A succeeds to all the property of B including the property in dispute. Where separatism dies,

the unification follows. By Prem or divine love and divine love alone, one can bridge the gulf between man and God. Bhakti is the only safe unerring bridge between man and God. In one of her songs Mira Bai declares to the world this path of Love to attain the Supreme ; the translation of it runs as follows :—

"MIRA BAI ON THF WAY TO GOD"

"If by bathing daily God could be realised, sooner would I be a whale in the deep. If by eating roots and fruits He could be known, gladly would I choose the form of a goat. If the counting of rosaries uncovered Him, I would say my prayers on mammoth beads. If bowing before stone images unveiled Him, A flinty mountain I would humbly worship. If by drinking milk the Lord could be imbibed, many calves and children would know Him. If abandoning one's wife would summon God, would not thousands be eunuchs! Mira Bai knows that to find the divine one, the only indispensable is LOVE."

He lives who loves. Love the lord and you love all the worlds, for they are within Him.

He who loves knows the lord. For, as lord Krishna declared in the Gita, 'through love alone I can be seen, known and entered into.'

Thiruppugal Mani

அயன்தவத் தீன்ற சித்திபுத் திகளாம்
அம்மையர் இருவரை மணந்தே
இயன்ற அண்டங்கள் வாழ்வுறச் செய்யும்
எழில் மணக் கோலத்தை மறவேன்;
பயன்தரும் கருணைக் கற்பகத் தருவே!
பரசிவத் தெழுபரம் பரமே!
வயம்தரு நிமல நித்தியப் பொருளே!
வல்லபை கணேசமா மணியே!!

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd:—1924 Phone:—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள்	(அச்சில்)		
கணபதி பக்தர்கள்	,,		
முருகனடியார்	,,		

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18